கல்வெட்டு

Kalvettu

திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆடித் திங்கள்



பல்லவர் கால எடைக்கல் - ஸ்ரீவிடே[ல்] விடுகு

கல்வெட்டு – காலாண்டிதழ் – 86 (ஜூலை 2011) விலை: ரூ. 10.00

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

உள்ளே

வ.எண்.		பக்கம்
	பதிப்புரை	
1.	தமிழக ரோமானிய நகரங்கள் அரிக்கமேடு, அழகன்குளம் ஓர் ஒப்பாய்வு -முனைவர் சீ. வசந்தி	1
2.	தமிழகம் போற்றும் மாசி மகத்திருநாள் -வெ. இராமமூர்த்தி	8
3.	கொங்குநாட்டில் பிரம்மதேயத்தில் இடங்கைப்படை - பெ. கௌதமபுத்திரன்	12
4.	A Plea for the Ethnoarchaeological Studies at the Nilgiris - Dr. C. Maheswaran, Dr. S. Vasanthi	15
5.	கல்லாபுரம் கல்வெட்டுகள் - இரா. சிவானந்தம்	21
6.	விடேல்விடுகு எடைக்கல் - கி. ஸ்ரீதரன்	25
7.	சிவகிரிபுதூர் அத்தனூரம்மன் கோயில் - து. துளசிராமன்	28
8.	மேலைக்கிடாரம் - திருவனந்தீசுவரர் திருக்கோயில் ஒரு வரலாற்றுப்பார்வை - சொ. சந்திரவாணன்	31
9.	பண்டைய தென்னிந்திய நூலகங்கள் - சு. செல்வகுமரன்	34

கட்டுரைகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு இத்துறை முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் திரு. சி. பி. சிங், இ.ஆ.ப., அவர்கள் சார்பாக தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர், திரு. பெ. கௌதமபுத்திரன் அவர்களால் வெளியிடப்பட்டது.

இணையதளம் www.tnarch.gov.in

மின் அஞ்சல் tnarch@tn.nic.in

சி.பி. சிங், இ.ஆ.ப,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல்துறை
தமிழ் வளர்ச்சி வளாகம்
ஆல்சு சாலை
சென்னை - 600 008

பதிப்புரை

வரலாற்று அறிஞர்கள், தொல்லியல் வல்லுநர்கள் ஆதாரங்களுடன் எழுதுகின்ற ஆய்வு கட்டுரைகள் இத்துறையின் காலாண்டிதழ்களில் தொடர்ந்து வெளியிடுவது வாயிலாக பண்டைய தமிழகத்தின் அரசியல், நிர்வாகம், சமுதாயம் மற்றும் பொருளாதாரம், வாணிபம், சமயம் பற்றி அனைவரும் அறிந்து கொள்வதற்கு பெரிதும் துணையாக உள்ளன. மேலும் இக்காலாண்டிதழில் கல்வெட்டுகள், செப்பேடுகள், காசுகள் அகழாய்வு தொல்பொருள்கள் போன்றவைகளை அடிப்படை சான்றுகளாக வைத்து ஆய்வுக்கட்டுரைகள் எழுதப்பட்டு நூலாக வெளிக்கொணரும் பணிகளை முதன்மைப் பணிகளாக தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை செய்து வருகின்றது.

இவ்விதழில் எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ள தமிழக ரோமானிய நகரங்களான அரிக்கமேடு, அழகன்குளம் ஒப்பாய்வு கட்டுரையில் தமிழ்நாட்டில் அகழாய்வில் கிடைக்கப்பெற்ற கிரேக்க, ரோமானியப் பானை ஓடுகள் அந்நாட்டு தங்கம், வெள்ளி காசுகள், மணி வகைகள் போன்ற தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ள கட்டுரையாகும்.

தமிழகம் போற்றும் மாசி மகத்திருநாள் குறித்தக் கட்டுரையில் பண்டையத் தமிழர் தம் வாழ்வில் திங்கள் தோறும் திருவிழாக்களை நடத்தி இன்புற்றிருந்தனர் என்பதும், ஒவ்வொரு திருவிழாவின் கடைசி நிகழ்ச்சியாக நீராட்டு விழாவினை தொன்று தொட்டு நடத்தி வருகின்றனர் என்பதையும் உணர்த்தும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

மேலும், கொங்கு நாட்டில் பிரம்ம தேயத்தில் இடங்கைப்படை என்ற கட்டுரையில் கொங்கு நாட்டில் உள்ள பல்வேறு சமுக பிரிவுகள்; இப்பிரிவுகளின் பணிகளும், கடமைகளும், பண்பாடு பற்றியும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

விட்டேல் விடுகு எடைக்கல் ஆய்வில் விடேல்விடுகு என்ற சிறப்பு பெயர் பிற்கால பல்லவ மன்னர்களும் அவர்களின் கீழ் ஆட்சி செய்த முத்தரையர்கள் என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது.

ஒரு சில கட்டுரைகள் கோயில்களின் அமைவிடம், கட்டிடக்கலை, கல்வெட்டுச் செய்திகள், இவ்வூர் கோயில்கள் உள்ள ஊர்களின் பெயர்காரணம் மற்றும் பொருளாதாரம் போன்றவைகள் பற்றி சிறப்பாக கூறுகின்றது.

பண்டைய தென்னிந்திய நூலகங்கள் என்ற ஆய்வு கட்டுரையில் தமிழகத்தில் பண்டைய நூலகங்கள் எங்கெல்லாம் இருந்தது, அந்த நூலகங்களின் பணிகள், பயன்பாடுகள் மற்றும் நூலக நிர்வாக முறை போன்ற செய்திகள் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளன.

இவ்விதழின் பதிப்பு பணியினை மேற்கொண்ட இத்துறை திரு. பெ. கௌதமபுத்திரன் தொல்லியல் துணைக்கண்காணிப்பாளர் மற்றும் டிடிபி மற்றும் அட்டைப்படம் வடிவமைத்த திருமதி. தே. சத்தியவதி, திரு. மு. சக்திவேல் மற்றும் அச்சுப்பணியினை மேற்கொண்ட அச்சுப் பிரிவினரின் பணிகள் பாராட்டுக்குரியது. தொல்லியல் அலுவலர் திரு. வெ. இராமமூர்த்தி, திரு. ஸ்ரீ. ஸ்ரீகுமார் தொழில் நுட்ப உதவியர் ஆகியோரின் தொழில் நுட்ப பணிகள் சிறப்பிற்குரியதாகும்.

நாள்: 28.05.2012

முதன்மைச் செயலர் (ம) ஆணையர்

1

தமிழக ரோமானிய நகரங்கள் அரிக்கமேடு, அழகன்குளம் ஓர் ஒப்பாய்வு

முனைவர். சீ. வசந்தி
தொல்லியல் துணைக்கண்காணிப்பாளர்,
சென்னை.

பண்டையத் தமிழரின் சமுதாய வாழ்க்கை மற்றும் பண்பாட்டுச் சிறப்புகளை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. அக்காலத்தில் தமிழர்கள் கடல்கடந்து வாணிகம் செய்துள்ளனர் என்பதையும், குறிப்பாக கிரேக்க, ரோமானிய நகரங்களுடன் அவர்கள் கொண்டிருந்த வாணிகத் தொடர்புக் குறித்து பல செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. இச்செய்திகள் தமிழகத்தில் பல இடங்களில் கிடைத்த தொல்லியல் சான்றுகள் மூலம் உறுதிசெய்யப்படுகின்றன. கிரேக்க, ரோமானியப் பானை ஓடுகள். அந்நாட்டு தங்க, வெள்ளி காசுகள், மணி வகைகள் ஆகியவைகள் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

தமிழகத்தில் பல இடங்களில் ரோமானிய மன்னர்களின் தலை பொறிக்கப்பட்ட காசுகள் கிடைத்தாலும், அரிக்கமேடு (பாண்டிச்சேரி யூனியன் பகுதியில் உள்ள அரியாங்குப்பம் ஆற்றை ஒட்டி அரிக்கமேடு அமைந்துள்ளது). அழகன்குளம் (இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகை ஆறு கடலோடு கலக்கும் இடத்திற்கு அருகில் உள்ளது) ஆகிய இடங்களில் தான் அந்நாட்டைச் சேர்ந்தப் பானை ஓடுகள் அதிகளவில் கிடைத்துள்ளன. இக்கட்டுரையில், இவ்விரு இடங்களில் கிடைத்த பானை ஓடுகள் குறிப்பாக அரிட்டைன் மட்கலன்கள், (Arretine ware) ஆம்போரா சாடிகள் (Amphorae jar) மற்றும் ரோமானியக் காசுகள், ஆகியவைகளைக் கொண்டு இவ்விரு நகரங்களும் பண்டைய நாளில் சிறந்த வணிக நகரங்களாகத் திகழ்ந்துள்ளன என்றும் ரோம்நாட்டுடன் வணிகத் தொடர்புக் கொண்டிருந்ததையும் அறிய முடிகின்றது.

அரிட்டைன் மட்கலன்

அரிட்டைன் மட்கலன்கள், இத்தாலியில் உள்ள அரிட்டியம் தற்போதைய அரிசோ என்ற இடத்தில் முதன்முதலாக வனையப்பட்டதால் இப்பெயர் பெற்றது. இம்மட்கலன்கள்

இத்தாலியில் மட்டுமில்லாது ரோமானியர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பிற இடங்களிலும் கிடைக்கின்றன. இம்மட்கலன்கள் *டெர்ரா சிகிலிடா* (Terra Sigillata) அல்லது முத்திரைமண் என லத்தின் மொழியில்[1] வழங்கப்படுகிறது. இவ்வகை மட்கலன்கள் இளஞ்சிவப்பு நிறமுடையவை. மிகவும் மென்மையான களிமண் கொண்டு வனையப்பட்டவைகளாகும். இம்மட்கலன்கள் முதன்முதலில் தென்னிந்தியாவில் அரிக்கமேட்டில் கிடைத்தன. பின்னர் அழகன்குளத்திலும் கண்டுபிடிக்கப்பட்டன. அரிக்கமேட்டில் 48 எண்ணிக்கையிலானப் பானை ஓடுகள் முனைவர் காலின் வார்னர் என்ற ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டுள்ளன[2]. மேலும் இவை அனைத்தும் ஒரு முறை கப்பலில் கொண்டு வரப்பட்டிருக்கவேண்டும் எனவும் தெரிவிக்கின்றார்[3]. இவற்றின் காலம் கி.பி. 10 முதல் கி.பி. 40 வரையிலானவை எனவும், இவற்றில் கிழக்கு சிகிலிடா (Eastern Sigillata) வகையைச் சார்ந்தவைகள். இத்தாலிய வகை மட்கலன்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பே கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கின்றார். இதனை நோக்கும் போது ரோமானியப் பேரரசின் அனைத்துப் பகுதிகளுடனும் தமிழகம் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது எனத் தெரிகிறது. இவற்றில் குவளைகள், தட்டுகள் போன்றவைகள் செய்யப்பட்டுள்ளன. அரிக்கமேட்டில் கிடைத்த பானை ஓடுகளில் CAMVRI, ITTA, என்னும் முத்திரைகள் காணப்படுகின்றன.[4] இவை இம்மட்கலன்கள் செய்யப்பட்ட தொழிலகத்தின் பெயராக இருக்ககூடும்.

அழகன்குளத்தில் மூன்று அரிட்டைன் மட்கல ஓடுகள் கிடைத்துள்ளன. இவை AGM 8 என்ற ஆய்வுக்குழியில் அதாவது இரண்டாவது காலக்கட்டத்தில் (கி.மு. 300 முதல் கி.பி. 100 வரை) யிலான காலக்கட்டத்திய மண்ணடுக்கில் கிடைத்தன.[5] ஒரு சிறியப்பானை ஓட்டில் CAH எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் அழகன்குளத்திற்கும், ரோம் நாட்டிற்கும் இடையில் கி.பி. முதல் நூற்றாண்டில் வாணிகத் தொடர்பு இருந்துள்ளது எனத் தெரிகின்றது.

ஆம்போரா (Amphorae)

பண்டையக் காலத்தில் ரோமாபுரி, கிரேக்கம் போன்ற நாடுகளிலிருந்து வாணிகம் பொருட்டு தமிழகம் வந்த யவனர்கள், தம் நாட்டிலிருந்து உயர்ந்த ரக மதுவினைக் கொண்டு வந்திருத்தல் வேண்டும். அரசர்கள், செல்வந்தர்கள், அதிகாரிகள் மற்றும் உயர்ந்த நிலையில் இருந்தோர் இதனைப் பருகி மகிழ்ந்தனர், சங்க இலக்கியங்களில் அரசர்களைப் புகழ்ந்த புலவர்கள் *மணங்கமழ் தேறலை உண்டு மகிழ்வாயாக* எனவும், *தண்கமழ் தேறல் மடுப்ப மகிழ் சிறந்து எனவும், நாரரி தேறல் மாந்தி மகழ் சிறந்து* எனவும் பாடுகின்றனர்.[6] மேலும், இத்தேறலை வழங்கியவர்கள் பெரும்பாலும் *ஒண்டோடி மகளிர் பாசிழை மகளிர்* போன்ற அழகிய பெண்களேயாவார்கள். இதிலிருந்து இவை பொற்கலங்களில் வழங்கப்பட்டிருக்ககூடும் எனத்தெரிகின்றது. இவை தவிர, இம்மது வகைகள் எத்தகைய கலன்களில் கொண்டுவரப்பட்டன என்பதை குறித்த எந்த குறிப்புகளும் இவ்விலக்கியங்களில் காணப்படவில்லை. இத்தகைய மதுக்கலங்களைப் பற்றி அறிய நமக்குச் சான்றாகத் திகழ்பவை அகழாய்வுகளில் கிடைக்கும் தொல்பொருட்கள் தான்.

ஆனால் இவ்விலக்கியங்கள் யவனத்தேறல், எனப்படும் மதுவகைகள் நல்ல குப்பிகளில், நறுமணம் கமழ்ந்து, குளிர்ந்து இருந்ததாகக் குறிப்பிடுகின்றன. அரிக்கமேடு, கரூர், காவிரிப்பூம்பட்டினம், காஞ்சிபுரம், வசவசமுத்திரம், குடிகாடு, திருக்கோயிலூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளில் "ஆம்போரா" (**Amphorae**) என வழங்கப்பட்ட யவன மட்கலன்களில் உடைந்த பகுதிகள் கிடைத்துள்ளன.

ஆம்போரா, மிகப்பெரிய அளவிலான சேமிப்புக் கலமாகும். கிரேக்க மொழியில் "ஆம்பி" என்றால் இருபுறம் எனப்படும். இருபுறமும் கைப்பிடியுடன் கூடிய மட்கலன்கள் ஆம்போரா எனப்பட்டது. எந்தவிதமான வேலைப்பாடுகளும் இன்றி மிகவும் கனமான உட்புறச்சுவருடன் கூடியது. வெளிர் மஞ்சள் அல்லது இளஞ்சிவப்பு வண்ணத்தில் காணப்படுகின்றன. சக்கரத்தால் வனையப்பட்ட இக்கலத்தின் கழுத்துப்பகுதி குறுகியும், வயிற்றுப்பகுதி பருத்தும், கீழ்ப்பகுதி கூர்முனையுடன் தரையில் புதைத்து வைப்பதற்கு வசதியாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் மது வகைகள் ஆலிவ் எண்ணெய் (Olive oil) மற்றும் (garum) காரும் என்ற மீன் சட்டினி (fish sauce) முதலியவற்றைக் கொண்டு வரப்பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகின்றது[7]. இம்மதுக்கலத்தின் கழுத்துப் பகுதியில் இவற்றைச் சூளையில் இடுவதற்கு முன்னர் இதனைச் செய்த குயவரின் குறியீடு, காலம் மற்றும் கொள்ளளவு ஆகியவற்றைக் குறிப்பது வழக்கம். அத்தகைய குறியீட்டுடன் கூடிய மதுக் கலத்தின் கழுத்துப்பகுதி ஒன்று வசவசமுத்திரத்தில் கிடைத்துள்ளது[8]. பொதுவாக யவன மதுக்கலங்கள் 24 வகைகளில் உள்ளன. இவை காலியாக இருக்கும் பொழுது 150 கிலோ எடையும், மது நிரப்பப்பட்ட பின்னர் 225 கிலோ எடையும் கொண்டவையாகும். இக்கலங்கள் ஒருமுறை பயன்படுத்தப்பட்ட பின்னர் மறுபடியும் பயன்படுத்தப்படுவதில்லை.

அரிக்கமேட்டில் கிடைத்துள்ள யவன மதுக் குடுவைகள் உடைந்தே கிடைத்துள்ளன. மேலும், இத்துண்டுகளில் ரோம் நாட்டைச் சேர்ந்த போசலானா (Roman pozzolana) என்ற காரைப்பூச்சு காணப்படுகின்றது[9]. இந்தக் குடுவைகள் மது கொண்டு வரப்பட்ட பின்னர் உடைக்கப்பட்டு தரைப்பகுதிகளைப் போடுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன என அரிக்கமேட்டில் நடைபெற்ற அகழாய்வின் மூலம் தெரியவருகின்றது. ரோம் நாட்டிலிருந்து வந்த மிகப் பெரிய சரக்குக் கப்பல்கள் அரிக்கமேட்டில் நிற்பதற்கு ஏதுவாக போசலானாக் கலவை கலந்த மதுக்குடுவைகளின் உடைந்த பகுதிகளைக் கொண்டு கப்பல் தளங்களை அமைத்திருந்தனர். இந்த போசலானா என்ற காரை தண்ணீரைத் தாங்கக்கூடியது. ஆகையால், கப்பல் தளங்களில் நீருக்கடியில் போடவும், தரைப்பகுதியிலும் இதனைப் பயன்படுத்தி உள்ளனர் எனவும் எலிசபெத் அவர்கள் தெரிவிக்கின்றார்[10].

இவற்றில் தான் யவனத் தேறல் கொண்டு வரப்பட்டதா என ஐயம் எழுவது இயற்கையே. ரோமாபுரி, கிரேக்கம் ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளிலும், அங்குள்ள ஓவியங்கள் மற்றும் சிற்பங்களிலும் இக்கலங்களை ரோமானிய அடிமைகள் கப்பலில் ஏற்றுவது, இறக்குவது போன்று வரையப்பட்டும், செதுக்கப்பட்டும்

காணப்படுகின்றன. எனவே, தமிழகத்தில் கிடைத்த ஆம்போரா மதுக்கலன்கள், யவனத் தேறலை அதாவது ரோம் நாட்டைச்சேர்ந்த மதுவகைகளைக் கொண்டு வரப்பயன்படுத்தப்பட்டன என்பதை மேற்கண்ட ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

ரோமானியர் மது ஜாடியில் சிதைந்த பகுதியினை எகிப்து நாட்டில் செங்கடல் கரையிலுள்ள 'பெரெனிகே' (Berenike) என்ற பண்டைய ரோமானிய துறைமுகத்தில் அமெரிக்காவின் திலாவேர் (Dela ware) பல்கலைக்கழகப் பேராசிரியர் ஸ்டிவன் ஸைட்பாதம் (Steven side Botham) என்பவர் அகழாய்வு செய்துள்ளார். இந்த ஆய்வில் டிரஸ்ஸில் டைப் 2-4 என்ற ஆம்போரா வகையைச் சேர்ந்த மதுச் சாடியில் கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் மொழி மற்றும் எழுத்துக்களில் கொற்ற பூமான் என்ற வாசகம் பொறிக்கப்பட்டு உள்ளது. இந்த ஜாடி கி.பி. 60-70 என்ற கால அளவைச் சேர்ந்த மண் அடுக்கில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.[11]

தமிழகத்தில் கிடைத்தவை பெரும்பாலும் கிரேக்க நாட்டு மதுக்கலன் வகையைச் சேர்ந்தவைகளாகும். ஆயினும் தெற்கு இத்தாலியில் உள்ள காம்பியா என்ற இடத்தில் செய்யப்பட்ட மட்கலன்களும் தமிழகத்தில் கிடைத்துள்ளன. தமிழர்களும் இத்தகைய மதுக்கலங்களைப் போன்று செய்ய முற்பட்டனர். இந்த வகை மதுக்கலன்கள் பல காஞ்சிபுர அகழாய்வில் கிடைத்துள்ளன. ரோமானியர்கள் கி.மு. முதலாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஆறு அல்லது ஏழாம் நூற்றாண்டு வரையிலான கால கட்டத்தில் ஆம்போரா மதுக்கலன்களில் யவனத் தேறலைக் கொண்டு வந்திருக்க வேண்டுமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[12]

அரிக்கமேட்டில் கிடைத்தது போன்று அழகன்குளத்திலும் ஆம்போரா வகையைச் சார்ந்த மட்கலன்கள் கிடைத்துள்ளன. இவற்றில் குறிப்பிடத்தக்கவைகள் ஆம்போராவின் கைப்பிடிப் பகுதிகள், கழுத்துப்பகுதி மற்றும் அடிப்பகுதிகள் கிடைத்துள்ளன.[13] இவை காலம் I (கி.மு. 300 முதல் 100 வரையிலும்), II (கி.பி. 100 முதல் 500 வரையிலும் ஆன காலக்கட்டங்களைச் சார்ந்தவைகள் ஆகும்.[14]

ரோமானியக் காசுகள்

அரிக்கமேட்டில் ரோமானியக்காசுகள் எவையும் கிடைக்கவில்லை, ஆனால் முதலாம் இராஜராஜனின் காசு இரண்டு கிடைத்துள்ளன.

ஆனால் அழகன்குளத்தில் அகழாய்வில் முத்திரை குத்தப்பட்ட வெள்ளி காசு இரண்டும், சங்ககாலப் பாண்டிய மன்னர்களின் சதுர வடிவக் காசுகள் இரண்டும் கிடைத்துள்ளன. ஆறு ரோமானிய செப்புக்காசுகள் அகழாய்வுக் குழிகளில் கிடைத்துள்ளன. இவை அனைத்தும் வட்ட வடிவில், ஒரு புறம் ரோமானிய மன்னர்களின் தலையும், அவர்களது பெயரும், பின்புறம் ரோமானியக் கடவுளின் உருவங்களும் கிரேக்க எழுத்துக்களும் காணப்படுகின்றன[15]. இவை முறையே இரண்டாம் வேலன்டைன்,

(383-395) (Valentine II), ஆர்கேடீயஸ் (395-408) (Arcadius), கன்கார்டியன் (Concordian), முதலாம் தியடோசியஸ் (383-392) (Theodosius I), இரண்டாம் தியடோசியஸ் (402-450) (Theodosius II), ஹனோரியஸ் (353-408) (Honorius), மற்றும் புல்செரியா (408-423)[16] (Pulcheria) இவற்றின் மூலம் அழகன்குளம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு வரை ரோம் நாட்டுடன் வாணிகத்தொடர்பு கொண்டிருந்தது எனத் தெரிகிறது.

அரிக்கமேடு, அழகன்குளம் - ஓர் ஒப்பாய்வு

ஒற்றுமை:

1. இவ்விரண்டு இடங்களும் கிழக்குக் கடற்கரையின் வணிக நகரங்கள்
2. இரண்டிலும் ரோம் நாட்டினர் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதற்கு பல ரோம் நாட்டுத் தொல்பொருட்கள் கிடைத்துள்ளன.
3. இரு இடங்களிலும் விலை மதிப்பற்ற கல் மணிகளும் (Semi Precious stone beads) அவற்றின் மூலங்களும் கிடைத்துள்ளன.
4. அரிக்கமேட்டில் கண்ணாடியிலான மணிகள் செய்யும் தொழிற்கூடம் இருந்துள்ளது. இங்கு தயார் செய்யப்பட்ட மணிகள் தாய்லாந்தில் நடைபெற்ற அகழாய்வில் கிடைத்துள்ளன[17].
5. பாண்டிய நாடு முத்துக்கு புகழ் பெற்றது. இது *தென்பாண்டி முத்து* என்றே வழங்கப்படும். பாண்டிய நாட்டின் துறைமுகமான அழகன்குளத்திலிருந்து முத்து, பண்டைய மேற்கத்திய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.
6. பெரும்பாலும் எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் பண்டைய வணிக நகரங்களில் தான் கிடைத்துள்ளன. இவ்விரு இடங்களிலும் இதுபோன்று எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளமை வணிகத் தொடர்பை உறுதிப்படுத்துகிறது.
7. இவ்விரு இடங்களும் ரோம் நாட்டு வணிகர்கள் தங்களது பண்டங்களை கீழைநாடுகளுக்கு (தாய்லாந்து, இலங்கை, சீனா, இந்தோனேஷியா) கொண்டு சென்றிருக்கக் கூடும். எனவே தமிழக வணிகச் சந்தையாக (Emporium) இருந்திருக்கக் கூடும்[18].
8. சங்க இலக்கியங்களில் இவ்விரு இடங்களைப் பற்றிய நேரிடையான குறிப்புகளோ, செய்திகளோ காணப்படவில்லை.
9. ஆய்வாளர்கள் தாலமி குறிப்பிடும் பொதுகே எம்போரியம், சாலியூர் எம்போரியம் ஆகியவை முறையே அரிக்கமேட்டையும், அழகன்குளத்தையும் குறிப்பதாகக் கருதுகின்றனர். இக்கருத்து இவ்விடங்களிலிருந்து கிடைக்கும் தொல்பொருட்கள் மூலம் உறுதி செய்யப்படுகின்றது.[19]

வேற்றுமைகள்

1. அரிக்கமேடு அகழாய்வுகளில் ரோமானிய நாணயங்கள் கிடைக்கவில்லை.
2. அழகன்குளத்தில் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு வரையிலான ரோமானியக்காசுகள் அகழாய்வுக் குழிகளில் கிடைத்துள்ளதால் இப்பகுதி வாணிபத்தில் ரோம் நாட்டுடன் சிறந்து விளங்கியதை உறுதிப்படுத்துகிறது.
3. அழகன்குளம் இலங்கைக்கு அருகாமையில் அமைந்துள்ளதால் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு வரை இலங்கையுடன் தொடர்பு கொண்ட சிறந்த நகரமாக விளங்கியுள்ளது. ஏனெனில் எழுத்துப் பொறிக்கபபட்ட பானை ஓடுகளில் இலங்கை தமிழ் பிராமி எழுத்து மற்றும் குறியீடுகளும் காணப்படுகின்றன.
4. அரிக்கமேட்டில் கி.பி. முதலாம் நூற்றாண்டு வரையிலான தொல்பொருட்கள் கிடைப்பதால் இவ்விடம் முதல் நூற்றாண்டுக்குப் பின்னர் ரோம் நாட்டுடனான தொடர்பு அருகியிருக்கக் கூடும்.

முடிவுரை

மேற்கண்ட ஆய்வுகள் மூலம் தமிழகம் பண்டைய ரோம் நாட்டுடன் கொண்டிருந்த வாணிகத் தொடர்பு கி.பி. நான்காம் நூற்றாண்டு வரை இருந்துள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆய்வு ஒரு ஆரம்பமே. இதில் மேலும் அகழாய்வு மற்றும் இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு ஆய்வு மேற்கொண்டால் தமிழகத்தின் பண்டைய வாணிகத் தொடர்புகளை விரிவாக அறியமுடியும்.

Foot Notes

1. From Wikipedia, the free encylopedia
2. Kathleen Warner Slane, *Other Ancient Ceramics imported from the Mediterranean,* p.363, Vimala Begley (ed), The Ancient Port of Arikamedu, Ecole Francaise Orient, Pondicherry, 1996.
3. Ibid. ..366.
4. Wheeler, R.E.M. et.al. 1946= Wheeler R.E.W, Gosh, A. and Krishna Deva, 1946 "Arikamedu, an Indo-Roman Trading - Station on the East coast of India" Ancient India 2, p.35
5. Sridhar, T.S., Ed. Alagankulam, An Ancient Roman Port city of Tamil Nadu., TNSDA, 2005, p.23
6. Champalakshmi R. Trade, Indology and Urbanization: South India, 330 BC to AD 1300 (Oxford University Press, New Delhi) Reprint 2006 p. 179-80

7. Elizabeth Lyding Will, *Mediterranean Shipping Amphoras* from the 1941-50 Excavations, pp 317-320 Vimala Begly Ed. The Ancient Port of Arimkamedu, Ecole Francaised Extreme Orient, Pondicherry, 1996.

8. Nagaswamy, R., and Abdul Majeed, A, Vasavasamudram, TNSDA., 1978. p. 10

9. Elizabeth L. Will., p.317

10. Ibid, 318

11. Iravatham Mahadevan, *Pottery Inscriptions in Brahmi and Tamil Brahmi,* p291, Vimala Begley (ed), The Ancient Port of Arikamedu, Ecole Francaised' Extreme Orient, Pondicherry, 1996.

12. Roberta Tomber, Indo Roman Trade, Gerald Duck worth & Co Ltd., UK., 2008, p. 42.

13. Ibid p.27

14. Ibid p 11

15. Nagaswamy, R.Roman Karur, Brahad Prakashan, Madras, 1995, p 74.

16. Ibid p.85

17. Sridhar, T.S. *Role of Ancient Ports in Promoting Trade & Culture of TN in South East Asia*: Article Presented in the 3rd SSEASR Conference, Bali Island, Indonesia, 2009.

18. Ibid p.24,25

19. Roberta Tomber, Indo Roman Trade, Gerald Duck worth & Co Ltd., 2008, p. 133.

2

தமிழகம் போற்றும் மாசி மகத்திருநாள்

வெ. இராமமூர்த்தி
உதவி இயக்குநர். (கோயம்புத்தூர்).

மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியினைத் தருவது திருவிழாக்கள். பண்டைத் தமிழர் தம் வாழ்வில் திங்கள் தோறும் திருவிழாக்களை நடத்தி இன்புற்றிருந்தனர். ஊர் ஒன்று கூடி உறவினர்கள் கலந்துரையாடி, இறைவனை வழிபட்டு, திருவிழாக்களை முறையே ஏழு நாட்கள், எட்டு நாட்கள், பதினோறு நாட்கள் நடத்தி இறுதியில் நீராட்டு விழாவினையும் சிறப்புற செய்தனர் என்பதற்கு கிடைக்கும் இலக்கிய சான்றுகளும், கல்வெட்டுச் சான்றுகளும் நமக்கு ஏராளம்.

சித்திரைத் திருவிழா, வைகாசி விசாகம், ஆனிமூலம், ஆடிப்பூரம், ஆவணி அவிட்டம் புரட்டாசி திருவோணம், ஐப்பசி விசு, கார்த்திகை கார்த்திகைத் தீபம், மார்கழிதிருவாதிரை, தைப்பூசம், தைப்பொங்கல், மாசிமகம், பங்குனி உத்திரம் என பன்னிரண்டு நட்சத்திரங்களை மையமாகக் கொண்டு பாங்குடனே விழாவினை நடத்திட்டார்கள்.

இம்மாசிமகநாளில் மாசி மகத்திருவிழாப் பற்றிய கல்வெட்டுச் செய்திகளைக் காண்பது இன்றைய தமிழக மக்கள் இவ்விழாவில் காட்டும் ஆர்வத்திற்கு ஒரு வரலாறு தரும் வகையில் அமைந்திடும். மாசித்திங்களில் மகம் நட்சத்திரம் கூடிய முழுமதிநாளில் கொண்டாடப்படும் விழா மகத்திருவிழா ஆகும். மாசித்திங்களில் வரும் மகத்தன்று இறை திருமேனிகளை (சிவன், பெருமாள்) கடல், ஆறு, குளம் முதலிய நீர் நிலைகளுக்கு எழுந்தருளச் செய்து நீராட்டுவது தொன்மையான ஆகம மரபாகும். இறைவன் மட்டுமல்லாது மனிதர்களும் தங்களது பிறந்த நட்சத்திரத்தன்று புனித நீராடிக் கொள்வதை இன்று ஆகம முறைப்படி நிகழும் மணிவிழா போன்றவற்றில் காண்கிறோம்.

சங்க காலந்தொட்டு இக்காலம் வரையிலும் கல்வெட்டுக்கள் மற்றும் இலக்கியங்களில் நீராட்டு விழா பற்றிய செய்திகள் நமக்கு நிரம்பக் கிட்டுகின்றன. மங்கல நீராட்டுவிழா "நீரணிவிழவு" என்று சிலப்பதிகாரத்தில் பேசப்பட்டுள்ளது. மதுரைக் காஞ்சியின் ஆசிரியர் மாங்குடி மருதனார் "கழுநீர் கொண்ட எழுநாள் ஆந்தி ஆடுதுவன்று விழவின் நாடார்த்தன்றே" என்று குறிப்பதன் மூலம் ஏழாம் நாள் இறுதியில் நீராடல் விழா அமைந்தது என்று அறிகின்றோம்.

ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த கோக்கரு நந்தடக்கன் எனும் ஆய்குல மன்னன் வழங்கிய செப்பேட்டில் திருமாலுக்கு விழாப்புறமாக ஏழு நாள் திருவிழாச் செய்து பங்குனி விசாகம் ஆறாடுவதாகவும் என்றக் குறிப்பின் மூலமும் ஏழாவது நாள் வழக்கில் இருந்தது தெரிய வருகிறது. ஏழு நாட்கள் கொண்டாடப்பட்டு பின்னர் எட்டுநாட்களாகவும் அதன்பின்னர் பதினொரு நாட்கள் என்ற வகையிலும் கொண்டாடப்பட்டுள்ளன. மாசிமக நீராடலை "பிதுர் மாகஸ்நானம்" என்று மகாபுராண அம்மானை கூறுகிறது. சங்க காலப் பாண்டிய மன்னன் "முந்நீர் விழாவின் நெடியோன்" என்று அழைக்கப்படுவதை, ஒன்பதாவது புறநானூற்றுப் பாடலில் காணலாம். முந்நீர் என்பது கடல் நீர் என்று கருதப்படுகிறது. கடல், ஆறு, குளம் ஆகியவற்றின் நீர் முந்நீர் என்று சொல்பவர்களும் உண்டு.

திருஞானசம்பந்தர் தனது மயிலாப்பூர் பதிகத்தில்

"மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சுரம் அமர்ந்தான்"

என்று கபாலீசுவரரின் மாசிமகக் கடலாடு விழாவைத் தெளிவாகக் காட்டுகிறது.

முதலாம் குலோத்துங்கனது (கி.பி. 1070-1126) தளபதி நரலோகவீரன், சிதம்பரம் கோயிலில் செய்த பணிகளையெல்லாம் அழகான தமிழ்ப்பாடல்களாகவும், சமஸ்கிருதச் சுலோகங்களாகவும் சிதம்பரம் நூற்றுக்கால் மண்டபத்து தூண்களில் கல்வெட்டாக பொறித்துள்ளான் அவற்றில் ஒரு பாடல்,

"மாசிக் கடலாடி வீற்றிருக்க மண்டபமும்
பேசவற்றைப் பெருவழியும் ஈசற்குத்
தென்புலியூர்க் கேயமைத்தான் கூத்தன் திசையனைத்து
மண்புலியாணை நடக்கவைத்து"

என்று மாசிக் கடலாடலையும், அதற்காக அவன் அமைத்த மண்டபம், பெருவழி ஆகியவற்றை அது எடுத்துச் சொல்கிறது.

திருச்செந்தூரில் இரண்டாம் வரகுணபாண்டியரின் (கி.பி. 862) மூன்று அதிகாரிகள் 1400 காசினை மூலதனமாக வைத்து அங்கு பல விழாக்கள் நடத்த வகை செய்துள்ளனர். அவற்றில் ஒரு விழாவாக மாசிமகம் குறிக்கப்பட்டுள்ளது. இதுவே கல்வெட்டுகளில் காணப்படும் தொன்மையான மாசிமக விழா எனலாம்.

முதலாம் இராசராசனின காலத்தில் (கி.பி. 1009) திருச்சி மாவட்டம் திருப்பராய்த்துறை மகாதேவர்க்கு மாசிமகத்தன்று பெருந்திருவமது படைக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒன்றரை மா அளவு நிலம் நல்கப்பட்டு இரண்டு கல அரிசி கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

இராசேந்திர சோழனின் 4-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1016) நாகப்பட்டினக் கூற்றத்து ஊரார்கள் இறைவனது மாசி மகவிழாவின் ஆறாம் நாள் செலவுகளுக்காக

நிலமளித்த செய்தி அவ்வூர்க் கல்வெட்டால் அறியமுடிகிறது. விழாவின் ஒரு நாள் செலவை, குறிப்பிட்ட ஊர் மக்கள் ஏற்றுச் செய்வதும் அதற்காக நிலம் ஒதுக்குவதும் பண்டைத் தமிழகத்தில் விழாக்கள் எந்த அளவு சிறப்பாகவும், அளவில் பெரியதாகவும், இடைவிடாதும் நிகழ்ந்தன என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு ஆகும்.

திருமறைக் காட்டில் (வேதாரண்யம்) ஏழு நாள் கொண்டாடப்பட்ட மாசித் திருநாளின் போது இறைவன் மோகனதேவருக்கு நாள் ஒன்றுக்கு பதின் கலமாக எழுபது கலம் நெல் தானமாக அளித்திடும் வகையில் பாலையூர் கிழவன் நாரணன் காடன் நிலம் தந்துள்ளான். மேலும் அவனே இரண்டு ஆண்டுகளுக்குப்பின் மாசிமகத்துக்கு பெருந்திருவமது இறைவனுக்கு படைத்திட வேண்டி இன்னும் கூடுதலாக நிலமளித்துள்ளான்.

மாசிமகவிழா சிவபெருமானை மையமாகக் கொண்டே நிகழ்ந்துள்ளது. எனினும் திருவரங்கத்தில் கி.பி. 1531- ஐச் சார்ந்த விஜயநகர் காலக் கல்வெட்டு உறையூரில் நடைபெற்ற மாசிமக விழா செய்தியைச் சொல்லுகிறது. இதனை

> "தம்முடைய கைங்கரியமாக உறையூர்
> வல்லிநாச்சியார் உத்ஸவபேரமும் எழுந்தருளுவித்து"
>
> "பெருமாள் கிருஷ்ணராயர் கட்டளையான
> மாசி எட்டாந் திருநாளில் எழுந்தருளும்படிக்கு
> உறையூர் நாச்சியார் தொப்பாக"

என்ற கல்வெட்டு வரிகளின் மூலம் தெளிகின்றோம்.

மாசி மகவிழாவின் போது தெய்வங்கள் நீராடுவதும் அதன் பிறகு அருகில் அமைக்கப்பட்ட மண்டபம், தோப்பு ஆகியவற்றில் காட்சி தருவதும் அத்தெய்வங்களுக்கு "பெருந்திருவமிர்து" படையல் படைக்கப்படுவதும் மரபு என்று மேற்சொன்ன கல்வெட்டுச் செய்திகள் விளக்குகின்றன. மேலும் இவ்விழாவின் போது பிராமணர்களுக்கு உணவளிப்பதும் சிறப்பாக நிகழ்ந்துள்ளது. குடுமியான் மலையில் உள்ள குலோத்துங்கன் மற்றும் பரகேசரி பட்டமுடைய மற்றொரு சோழமன்னன் ஆகியோரது கல்வெட்டுக்கள் மாசி மகநாளில் பிராமணர்களுக்கும் மற்றும் பதினைந்து சிவனடியார்களுக்கும் (மாகேஸ்வரர்) உணவு வழங்க 15 கழஞ்சு பொன் முதலாக வழங்கப்பட்டதைக் கூறுகின்றன.

இதைப்போல திருச்செங்கோட்டிலும் சோழர்காலத்தில் உத்தமன் கணவதி என்பான் 26 கழஞ்சு பொன் கொடுத்து மாசிமக நாளில் பிராமணர்களை உண்பிக்கச் செய்துள்ளான். இவ்வாறு இறைவன் தீர்த்தமாடலும், வீதிவுலா, தேர் உலா வருகின்ற நிகழ்ச்சியும் நெடுங்காலமாக நடைபெற்று இன்றும் பல இடங்களில் நிகழ்ந்தும் வருகின்றன. இந்நிகழ்ச்சிகள் ஏன் உருவானது என்று நினைக்கும் போது ஊர் மக்கள் ஒற்றுமையோடும், மகிழ்ச்சியோடும் ஒன்றுபடுதலுக்கும், வயதில், வயதில் முதிர்ந்தோர், நோய்வாய்ப்பட்டோர், ஊனமுற்றோர் அன்றைய சமூக நீதி காரணமாக கோயிலுக்குள் வரஇயலாதோருக்கும்,

இறைவன் தானே உலா எழுந்தருளி அவர்கள் எல்லோருக்கும் காட்சியளிக்கும் நல்எண்ணமாகவும் இவ்விழாக்கள் உருப்பெற்றனவோ என்று எண்ணத் தோன்றுகிறது. மாசிமகவிழாவின் போது இறைவனுக்கு மட்டுமல்லாது, பிராமணர்களுக்கும், சிவனடியார்களுக்கும் உணவு வழங்கப்பட்டதை நாம் கவனிக்க வேண்டும். கால வெள்ளத்தில் இவ்வழக்கு மெல்ல மறைந்தபோதிலும் நாம் இன்று நலிந்தோருக்கு இவ்விழாநாளில் உணவளித்து பண்டைய விழாக்களின் நோக்கத்தை ஈடுசெய்வோமாக.

கையாண்ட நூல்கள்

1. தொல்லியல் நோக்கில் - நடன காசிநாதன்
2. திருவாரூர் திருக்கோயில் - குடவாயில் பாலசுப்ரமணியன்
3. தியாகராயசுவாமி கோயில் - திருவாரூர் பொன்னுசாமி
4. தெ. கோயில் சாசனங்கள் தொகுதி3 - பகுதி 2.
5. புதுக்கோட்டை கல்வெட்டுக்கள்
6. மாசிமகமும் மங்கல நீராட்டும் - எஸ். இராமசந்திரன்
7. குடுமியான் மலை - சொ. சாந்தலிங்கம்
8. தெ.க.தொகுதிகள் 3, 16, 19, 24
9. திருப்பத்தூர் - வள்ளி சொக்கலிங்கம்
10. கல்வெட்டு ஆண்டறிக்கை - 1956-57

3

கொங்குநாட்டில் பிரம்மதேயத்தில் இடங்கைப்படை

பெ. கௌதமபுத்திரன்
தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர்.

கொங்கு நாட்டில் பிரம்மதேயங்கள் இருந்தமைப் பற்றி பதிற்றுப்பத்து பதிகங்கள் கூறுகின்றது. கொங்கு நாட்டு உம்மறகாட்டில் ஆனைமலையில் பிரம்மதேயத்திங்கள் நிலைப்பெற்றிருந்தது, இந்நிலையில் தொடர்ந்து வந்த அரசர்கள் பிரம்மதேய உருவாக்கத்தில் பெரும்பங்கு ஆற்றியுள்ளனர். சேரர்கள், வீரகேரளர்கள், கொங்கு சோழர் ஆகிய அரசமரபினர் பிரம்மதேயங்களை ஆற்றுப் படுகையில் உருவாக்கினர், இந்த பிரம்மதேயங்கள் வளமான ஆற்றுப்படுகையில் உருவாக்கப் பெற்றது. நீர்வளமும், நிலவளமும் நிறைந்த ஆற்றுப் படுகை தகுந்த இடமாக இருந்து வந்துள்ளது. கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் கொங்கு நாட்டில் ஆற்றுப்படுகை அல்லாமல் பிரம்ம தேயங்கள் மலையேரப் பகுதிகளிலும் புதிய கிராமப்பகுதிகளாக உருவாயிற்று. இந்த மலையோறப் பகுதிகளில் அமைந்த பிரம்மதேசங்களை மலையில் வாழ்ந்த மலைவாழ் பழங்குடியினர் தாக்குதல் நடத்தி பொருளாதார இழப்புகளையும், சமூக பிரச்சனைகளையும் (Law and order problem) பிரம்மதேயத்தில் உருவாக்கினர். எனவே இந்த பிரச்சனைகளை சமாளிக்க அரசுப் பாதுகாப்புப்படை உருவாக்கப்பட்டது. இந்தப்படையை இடங்கைப் படையென்றும், வலங்கைப் படையென்றும் கல்வெட்டு செய்திகளில் குறிப்பிடுகின்றது.

சோழர்கள் காலத்தில் வலங்கைப்படை, இடங்கைப்படை என இரு படைபிரிவுகள் இருந்துள்ளது. வலங்கை பிரிவு வேளாளரும், அவர்களைச் சார்ந்த சாதியாகும். உருவாக்கிய பிரிவும், இடங்கைப்பிரிவு வணிகரும் அவர் தம் சார்ந்த சாதிபிரிவினரும் அமைத்த பிரிவு இடங்கைப்படை பிரிவு என்று அழைக்கப்பட்டனர். இந்த இரண்டு படைப்பிரிவுகளில் வலங்கைப்படை பிரிவுப்பற்றிய செய்தி முதலாம் இராசராசன் காலத்து கல்வெட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இடங்கைப்படைப்பிரிவு பற்றிய செய்தி முதலாம் குலோத்துங்கன் காலத்து கல்வெட்டிலும் குறிப்புகள் கிடைக்கப்பெறுகின்றது.

கொங்கு நாட்டில் இடங்கைப்படை பிரிவு பற்றிய செய்தி விசய மங்கலம் கல்வெட்டில் இடங்கை தொன்னுற்று சாதிகள் இடம் பெற்றிருந்ததாகவும், உடுமலைப் பேட்டை ருத்திரப்பாளையம் கல்வெட்டில் இடங்கைப் பற்றிய செய்தியானது.

ருத்திரப்பாளையம் இடங்கை கல்வெட்டு

கரைவழி நாட்டு இராச இராச வளநாட்டில் பிரம்ம தேயம் "ஸ்ரீ உலகுடைய பிராட்டிச் சதுர்வேதி மங்கலம்" என்ற புதிய பிரம்ம தேயம் அமைத்து அவ்வூரைப் பாதுகாக்கும் பொறுப்பை இடங்கை தொண்ணூறெட்டுச் சமையத்தாரிடம் கொடுத்து இவ்வூரில் வரும் வரிகளை இவர்களே பெற்றுக்கொண்டு நிர்வாகம் செய்ய ஆணை பிரப்பித்துள்ளார் சதுர்வேதி மங்கலத்தை கிரமம் என்று இன்றளவும் கேரளத்தில் அழைக்கின்றனர். இக்கல்வெட்டில் பிரம்மதேயம் கிராமம் என்று அழைக்கப்பெறுகின்றது. மேலும் இக்கல்வெட்டில் முதல் பக்கத்தில் மேல் பக்கத்தில் திருவாச்சி எருமை தலைமீது துர்க்கை, யாளி, அன்னம் இருப்புறமும் குத்து விளக்கும், குதிரை, சாமரம், கொம்பு, ஊதும் கருவி, வளைதடி, அம்பு, கேடயம், மூன்று வகைக் கலப்பைகள், செக்கு, குதிரை, கட்டில் மேல் புலி, நாகம் முதலியவை படைப்பு சிற்பங்களாக உள்ளது.

கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோபரகேசரி பன்மரான
2. திருபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ விக்கிரம
3. சோழ தேவற்க்குத் திருவெழுத்திட்டு செ
4. சல்லா நின்ற திருநல்லியாண்டு மூன்றாவ
5. தின் எதிர்கரை வழிநாட்டு இராஜராசவ
6. ள நாட்டு பிரம்மதேயம் ஸ்ரீ உலகுடைய பிரா
7. ட்டியச சதுர்வேதி மங்கல மென்று
8. ட.....யமாள பெரால இடங்கை குளமாக
9. காட்டார்ரெ உங்கள் பேரால் இடங்கை குளமாக பின்புறம்
10. க்கைக் கொண்டு இ௲ாமம் நமக்கு இறுக்கு
11. குங் கடமையும் உங்களுக்கே கொற்றுக்கு
12. டுத்தூணாக தந்தோமென்று நாயனார் அருளிச்
13. செய்தருள நாங்களு மி கிராமத்துக்கு நாயனார்
14. குடுத்தருளின ஸ்ரீமுகப்பு பெருநான் கெ
15. லைக்குட் பட்ட அருவரை அந்தந் பேராலே
16. யும் விக்கிரம சோழ தென்னறுங் குளங்
17. களும், பிடாகைகளும் ஊர்களிலும் அழி
18. மை அந்நியாயம் புகுத்தின நாங்களு
19. ம் ஸயையும் கூட ஆறாஞ்சு ஸயையா
20. ர்க்கு மேவத்தினது குடுப்போமாகவும்

21. ஸ்ரீ ரமத்திலும் பிடாகைகளும் கன்
22. று குண்டை கட்டிநார் உண்டாகில்
23. பன்றியிலொன்றாக குத்தி தூக்குவோம
24. ரகவும் ஸ்ரீ ரமத்துக்கு எங்கள் அத்தா . . . .
25. குள்ள பரிகார முண்டாவதாகவும் குத்தி
26. ஸ்ரீ ரமத்துக்குள்ளே புகுந்தாற்கு ஏ
27. ழு நாளைக்கு பரிகார முண்டாவுதாகும்
28. இப்பெருநான் கெல்லைக்குள்ப்பட்ட நில
29. ங்களு தோட்டங்களு அழிவு வாரா
30. மற் பரிசரிதுக் குடுப்போமாகவும், திருமுகப்படிக்
31. கு மேல்ப்பட்ட புகுந்தன நாயனார்க்கு விண்ணப்ப
32. ஞ் செய்து தீர்த்து குடுப்போமாகவும் திருமுகப்புக்
33. கை தொன்னுற்றெட்டுச் சமையமும் அமைஞ்சு
34. குடுத்தமைக்கு இவை சமைய காரணத்தாந் எழுத்
35. து ஸ்ரீ ரமம் இடங்கை தொண்ணுற்றெட்டு ச
36. மையத்தார் *ரக்ஷை*
37. வாழ்க தந்திரத்தார்

மேலும் கொங்கு நாட்டில் திருமுருகன்பூண்டி, அன்னூர், பேரூர் போன்ற ஊர்களில் கிடைக்கின்ற கல்வெட்டுகளில் இடங்கை நாயகீசுவரமுடையார் கோயில் என்ற குறிப்பு காணப்படுகின்றது. எனவே இக்கல்வெட்டு செய்தியானது இடங்கை நாயகீசுவர முடையார் கோயில், இடங்கைப் படைப்பிரிவினரால் கட்டியுள்ளனர் என்பதை உணரமுடிகின்றது. இவற்றில் "இடங்கை நாயகர்" என்று அழைக்கப்படுபவர்கள் இடங்கைப் படை பிரிவினருக்கு "தளபதி" அல்லது "தலைவர்கள்" இருந்திருக்கலாம். எனவே இடங்கைப்படை பிரிவைப் பற்றிய கல்வெட்டு செய்திகள் கொங்கு நாட்டில் மிகுதியாக கிடைக்கின்றது.

4

A PLEA FOR THE ETHNOARCHAEOLOGICAL STUDIES AT THE NILGIRIS

Dr. C. Maheswaran
&
Dr. S. Vasanthi

I. INTRODUCTION

In India, the ethnoarchaeological studies are still in incipient stage itself. South India, especially Tamilnadu is not an exemption to this general trend. However, field studies reveal that the Nilgiris the plateu located at the trijuncture of Tamilnadu, Kerala and Karnataka - seems to provide an ample scope for the ethnoarchaeological studies as there are perceptible inter-relationships identified among the varied indigenous ethnic groups such as Todas, Kotas, Kurumbus, Irulas, Paniyas, Kattunaickas with the prehistoric archaeological sites that are available in and around their habitation sites. 'Pon Thit' of the Todas, 'Amnaor Gudi' & 'Aynaor Gudi' of the Kotas, 'Ezhuthu Base' of the kurumbas could be cited as certain clinching evidences recognizable in reconstructing the picture of ethnoarchaeology of the Niligiris.

Hence, an attempt is made in this paper to voice the concern for initiating the ethnoarchaeological studies - atleast from the Nilgiris, II. Inter - relationships between Indigenous ethnic Groups and Prehistoric.

ARCHAEOLOGICAL SITES AT THE NILGIRIS.

In Tamilnadu, six different indigenous ethnic groups (, viz., Todas, Kotas, Kurumbas, Irumlas, Paniyas and Kattunaickas) have been identified as the 'Primitive Tribal Groups' (PTG's). All these PTG's are observed to be inhabiting the Nilgiri Hills in varied altitudes. While the

Todas - as the pastoral nomads in need of pasturing grass lands -ccupy the highest altitude (Above 1800 metres MSL), the Kotas - as the artisans of metalsmithy and pottery requiring the iron are and the typical black clay - inhabit the higher altitude but only next to the todas (Above 1600 metres MSL). Contrary to this, all the other PTGS, namely, Kurumbas, Irulas and Paniyas as the food - gatheres thriving on subsistence economy - live in the mid - altitude (Above 1200 metres MSL).

The prehistoric archaeological sites of the Nilgiris such as 'Rock Art sites' 'Megalithic Burial Structures' identified in and around the various tribal habitats are found to be associated with all these PTG's in one way or the other. Unfortunately, such affiliations are not considered and treated seriously as the integral parts within the approprite tribal cultural milieus by the ethnographers; Likewise, the prehistoric archaeologists who explored and identified the archaeological sites (and the archaeological remains) in and around the vicinity of tribal habitats of the Nilgiris failed to recognize their mutual inter - relationships.Moreover, even the inter - relationships identified in certain cases were given only marginal treatments and usually brushed aside both by the ethnographers and the prehistoric archaeologist because of lack of inter - disciplinary and or multi - disciplinary prespectives.

III. Earlier works bearing Elements of Nilgiri Ethnoarchaeological studies

It is James wilkinson Breeks, the first District Collector of the Nilgiris who initiated the subject - matter of Nilgiri ethnoarchaeological studies through his monumental work entitled, 'An Account of the Prinitive Tribes and Prehistoric Monuments of the Nilgiri' (1873)[1].

Almost a century later, certain western Anthropologists have taken up studying the inter - relationships that exist between the indigenous ethnic groups of the Nilgiris with their respective prehistoric archaeological structures and or material remains. For instance, Paul Hockings, the American Anthropologist not only undertook the ethnoarchaeological studies of the Nilgiris through his works Blue Mountains (1985) and Blue Mountains Revisited (1997) but encouraged his contemporaries William Noble (1976 & 1997), Dieter B. Kapp (1985) and Allen Zagarell (1997 & 1999).

Quite recently, C. Maheswaran (2008) has made a pioneering attempt of unraveling the ethnoarchaeological elements imbibed within the decorated pottery lids of prehistoric Nilgiris[3].

IV. Fresh Elements of Ethroarchaeological studies revealed through field explorations at the Nilgiris

Recent field explorations at the Nilgiris have revealed that there exist close inter - relationships between the indigenous ethnic groups and the prehistoric archaeological sturctures (the material remains identified and or unearthed therein).

4.1 'Pon Thit' of the Toda Tribes

At the vicinity of the Toda hamlets, megalithic burial structures in the shape of 'Draw well' are attested. Such cairn circles which are exclusive to the Nilgiris are accordingly designated as the 'Draw well Cairns'.

The Todas not only venerate these draw well cairns but consider them as the heritage structures that they have inherited from their ancestors. And these megalithic burial mounds are referred by them as 'Pon Thit' (Lit. "mound of metals")[4] since several metallic antiquities have been often noticed to emerge out of these mounds, now and then, due to the act of torrential rain water.

4.2 'Amnaor Gudi' & 'Aynaor Gudi' of the kota tribes

The kota tribes who occupy the seven hamlets known as 'Eazhoor kaokkaal' worships the 'Amnaor' ("Mother Deity") and 'Aynaor' ("Father Deity") as their principal deities. Each 'Kaokkaal' of the kotas accomodates a separate twin shines for these principal deities.

As and when the kotas tend to consecragate their shrines, the principal deities 'Amnaor' and 'Aynaor' are accomodated within a twin megalithic dtolmens located side by side at their 'Kaokkal' as 'transit shrines'. And these dolmens are construed by the kotas as the 'abodes of (their) ancestors', consequently, these megalithic structures have always been kept in veneration even in ordinary occasions as 'Amnaor Gudi' ("Shrine of Mother Deity") and 'Aynaor Gudi' ("Shrine of Father Deity")[5].

4.3 'Ezhuthu Bare' of the kurumba Tribes

At Vellarikombe, a kurumba hamlet located near Maamaram of Kotagiri Taluk in the Nilgiri's there is a prehistoric rock art site with depiction of a central key figure. The kurumba tribes believe that the spirit imbibed in this figure protects their entire hamlet throughout the year.Accordingly, the kurumbas of vellarikombe observe a magico - religious rite once in an year wherein they believe that the imbibed spirit of key figure get rejuvenated[6].

Interestingly, this rock art site is referred to as 'Ezhuthi Vare' and Ezhuthu Paare' respectively by the Imla tribes and the non - tribal people of the nearby Sundapatti.

V. Conclusion

The similarities identified between the archaeological remains unearthed from a site and the artefacts that are in utility among the living ethnic groups of the same arena postulates for 'Cultural similarity', in the first stage which in turn prove for the positive 'Cultural Succession' - the subject matter of ethnoarchaeology, at the next stage.

The situation cited above could be taken up as the cues for tracing the ethnoarchaeology of the Nilgiris. And thus, the material evidences unearthed from the Niligiris - in the form of motif - bearing decorated lids of terracotta, or bronze bowls could be utilized as useful units in reconstructing the holistic picture of Nilgiri's ethnoarchaeology.

Foot Notes

1 J.W. Breeks, in response to the call letter of authorities of the Indian Museum, Kolkata arranged for unearthing of more than four dozen megalithic burial sites in and around the Nilgiris. His compilation of valuable data has seen the light by the genuine - efforts of Mrs. Breeks as the posthumous publication in 1873.

2 However, it is very unfortunate that these western Anthropologists carried out their research works and or projects as tourist - visitors only but not as authentic research scholars obtaining due permissions from the Central and or State Governments. Hence, we could not glean the relevant findings out of their research works then and there.

[3] As the majority of zoomorphic motif of these decorated lids is identified as 'buffalo', its ethnoarchaeological connection was linked with the Todas, by a section of scholars. Contrary to this claim, the pottery making kotas on the one hand and the Kurumbas who get expertised in graphic and plastic arts on the other hand are thought of as possible links as well.

[4] It is Mr. Pothili kuttan, the Toda Activist of karsh Mund, Udhagamandalam, the Nilgiris who first pronounced one this attestation and later accompanied me to one such pristine sites of Draw well Cairns at the Nilgiris.

[5] In contradiction of utilizing the megalithic dolmens as' transit shirines', the Irulas revere the dolmens in their vicinity as 'Daevara Gudi' whereas the kurumbas employ them as 'Sacred Repositories' to stone objects of religious paraphernalia.

[6] The kurumba priest is believed to rejuvenate the image of this guiding spirit by observing a detailed magico - religious practice - which is often carried out as a secret rite.

[7] It is heartening to note that the rock art depictions are addressed as 'Ezhuthu', (in Consonance of the sangam Age usage).

Select Bibliography

Breeks, J.W. 1873. An Account of the primitive Tribes and prehistoric Mounments of the Nilgiris. London (Reprinted in 1983. Delhi: Cultural Publication House.

Hockings, P. (Ed.) 1985. Blue Mountains. Newyork : oxford University press.

Hockings, P. (Ed.) 1997. Blue Mounatains - Revisited : Cultural studies on the Nilgiri Hills.

Kapp, B.D. 1985. "The kurumbas' relationship to the Megalithic Cult of the Nilgiri Hills (South India)". 493-534. Anthropos 30.

Maheswaran, C. 2000. "Contribution of the Tribal Nilgiris in preserving Our Cultural Heritage". - proceedings of the seminar on 'Our Role in protecting the Cultural Heritage, Chennai : Government Museum.

Maheswaran, C. 2009. Decorated pottery Lids of the Megalithic Nilgiris (Unpublished Research Report). New Delhi: Nehru Trust for the Indian Collections at the Victoria & Albert Museum, London.

Noble, W. 1976. "Nilgiri Dolmens (South India)" 90-128. Anthropos 71.

Noble, W. 1997. "Nilgiri Prehistoric Remains." In Paul Hocking (Ed) Blue Mountains -Revisited: Cultural studies on the Nilgiri Hills. New York: Oxford University press.

Zagarell, A. 1997. "The Megalitic Graves of the Niligiri Hills and the Moyar Ditch". 23-73. In Paul Hockings (Ed.) Blue Mountains - Revisited: Cultural studies on the Nilgiri Hills.New york: Oxford University Press.

Zagonell, 1999 "Tradition, community, and Nilgiri Rock Art". In John E. Robb (Ed) Material symbols: culture and Economy in prehistry. Centre for Archaeological Invertigations, occasioned page no. 26, south Illinois: South Illinois University.

Colophon

The author of this paper wishes to record his deep sense of gratitude to Thiru S.S. Jawahar, I.A.S., Commissioner of Museums, Government of Tamilnadu who remains as the constant source of inspiration for carrying out professional accomplishments.

5

கல்லாபுரம் கல்வெட்டுகள்

இரா. சிவானந்தம்
கல்வெட்டாய்வாளர்.

திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டம் கல்லாபுரம் வேல் நகரில் இடிந்த பெருமாள் கோயில் ஒன்று தனியார் ஒருவரின் நிலத்தினை சீரமைக்கும் போது கண்டறியப்பட்டது. இக்கோயில் அதிட்டானம், ஜகதி, முப்பட்டைக் குமுதம் வரையிலான கட்டட அமைதி உள்ளது. தெற்குப் பகுதி குமுதம் மற்றும் ஜகதி பகுதிகளில் இரண்டு கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன. மேலும் கோயிலின் சிதிலமடைந்த பகுதிகள் கீழே விழுந்து கிடக்கின்றன. இவற்றில் சில துண்டுக் கல்வெட்டுகளும் கண்டறியப்பட்டன. இவ்விரு கல்வெட்டுகளும் கொங்குச் சோழர் மூன்றாம் விக்கிரமச் சோழனின் முறையே 25 மற்றும் 28-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுகளாகும். இவனது 28-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு உலகுடைய பிராட்டிச் சதுர்வேதி மங்கலத்து விக்கிரம சோழ விண்ணகர் எம்பெருமானுக்கு திருப்போனகம் (இறைவனுக்கு படைக்கும் உணவு) செய்ய 23 அச்சுப் பொன்னினைக் கோயில் பண்டாரத்தில் அளித்து, ஒரு பருவத்திற்கு இருபத்து முக்கல நெல் அளிக்க இவ்வூர் சபையாருக்கு அரசன் ஆணையிட்டுள்ளச் செய்தியினைத் தெரிவிக்கிறது. ஸ்ரீ உலகுடைய பிராட்டிச் சதுர்வேதி மங்கலத்து திருமேற்கோயில் ஸ்ரீவிக்கிரம சோழ விண்ணகர் எம்பெருமானுக்குத் திருப்போனகம் மற்றும் இரண்டு சந்தியா தீபம் வைக்க இக்கோயில் பிராமணரிடம் 27 அச்சு அளிக்கப்பட்டது. இத்திருப்போனகத்தில் ஒரு பங்கு இப்பிராமணர்களுக்கும் மற்றைய மூன்று பங்கு இக்கோயிலில் ஸ்ரீகாரியம் செய்வார்களுக்கும் வழிபட வரும் பிராமணர்களுக்கும் அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதை 25-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. படியெடுக்கப்பட்டக் கல்வெட்டுகளின் வாசகம் பின்வருமாறு:

1. *ஸ்வஸ்திஸ்ரீ* திரிபுவநச் சக்கரவர்த்தி கோனரிந்மை கொண்டாந் உலகுடைய பிராட்டிச் சது*வெ_தி* மங்கலத்து *ஸபை*யாற்க்கு நம் ஓலை குடுத்தபடியாவது தங்களூரில் விக்கிரம சோழ விண்ணகற் எம்பெருமாந் திருமுற்றத்திலே இடையற்றுக்குடி அழகநாந வீரநாராயண *ப்_ஹ்மா*தாயன் உகஙருளிவித்த வெண்
2. ணைக் காடியருளினயிடத்து . . . பலர் பக்கலும் வுனங் கொண்டு கண்ட திருப்போனகம் ஒன்றுக்கு அதிக மாஸம் உட்பட அச்சு இருபத்துமூன்றில் உபயம் கொண்டு

அமுதுசெயிதருளி வழிநடையாக அழிந்து வந்தமையில் இளம்பெருமாந் திருமுற்றத்து ஸ்ரீவிமாந திருப்பணிக்குப் பலபடியாலுங் கண்ட முதல்

3. கொண்டு கரைப்படைய் ஆகிய . . . செந்ற பின்பு முதலில்லாமை திருச்சாகைய் வாங்கி பொகானருரென்று இவ்வூர் ஸபையும் வைஷ்ணவர்களும் நமக்கு வந்தறிவித்தமையில் இவச்சு இருபத்து மூந்றும் இத்திருப்பணியிலே இட்டு இவ்வெம் பெருமாந் ஸ்ரீபண்டார உடலிலே இத்திருபோநகம் ஒந்றுக்கும் பூவில் இரு

4. பத்து முக்கல நெல் அமுதுபடி சென்று வருவதாகவும் இவ்வச்சு இருபத்து மூன்றும் இத்திருப்பணியிலெ புககழிகையால் இவச்சால் உடைய நெல் இருபத்து முக்கலமு இவ்வெம் பெருமான் ஸ்ரீபண்டாரத்திலே இத்திருப்போனகம் அமுது செய்து வழிநடையாக இட்டு வருவதாக இப்படி சந்த்ராதித்தவற் செல்வதா

5. கச் செம்பிலுஞ் சிலையிலும் வெட்டிக் கொள்ளப் பெறுவார்களாக நம் ஓலை குடுத்தோம் இவை சிவபாதசேகர ப்ரஹ்மராயனெ எழுத்து யாண்டு உயஎ எதிர் நாள் ௱கயஅ இவை குமரபாலன் எழுத்து

இடிந்த பெருமாள் கோயில், தெற்கு ஜகதி

1. . . . .விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு இருபத்தைஞ்சாவது கரைவழி நாட்டைப் பிறித்த இராஜராஜ வளநாட்டு ப்ரஹ்மதேயம் ஸ்ரீஉலகுடைய பிராட்டிச் சதுர்வேதி மங்கலத்து திருமேற்கோயில் ஸ்ரீவிக்கிரம சோழ விண்ணகர் எம்பெருமானைத் திருவா . . . . . .

2. . . . பெருமாளுமான தம்பி இளையாழ்வியும் இவ்விருவொம் இவ்வெம்பெருமானுக்கு வழிநடைத் திருப்போனகம் அரைக்கும் எங்கள் பெரிய தமப்பனுர் வேதநாயக பட்டர் மகள் குழலாழி ஒடுக்கின அச்சுப் பதிஞென்றரையும் ஸந்த்யாதீபம் ஒன்றுக்கு ஒடுக்கிந . . .

3. றாறு திருவுடையாள் திருப்போனகம் அரைக்கு ஒடுக்கின அச்சு பதிஞென்றரையும் ஸந்த்யாதீப[ம்*] ஒன்றுக்கு ஒடுக்கின அச்சு இரண்டும் ஆக அரசு இருபத்தேழும் முன் நாளில் எங்கள் பெரிய தமப்பனுர் வேதநாயக பட்டர் இத்திருமுற்றங்காணி கொள்கைக்கு பலர் ப . . .

4. . . . .ருபத்தேழுக்கும் பூவழி இருபத்தேழு கலநே நெல்லுபையங் கொண்டு இத்திருபோனகம் ஒன்றும் அதிக மாஸம் உள்பட இத்திருவிளக்கு இரண்டும் நாங்களும் எங்கள் மக்கள் மக்களும் மற்றும் இத்திருமுற்றத்துக் குடமுங் குச்சியுங் கொண்டு கோயில் புகுவாரும் செலுத். . .

5. . . .கொன்று நாழி ப்ரஸாதம் நாங்கள் கொண்டு நீக்கி ப்ரஸாதம் முந்நாழியும் இத்திருமுற்றத்து ஸ்ரீகாரியஞ் செய்வார்கள் அன்றுடு வந்த ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு

அழித்து வருவாராகவும் இப்படி ஸம்மதித்து இக்கல்வெட்டிக்குடுத்தோம் ஸ்ரீவைஷ்ணவ[ர்*]களுக்கும் ஸ்ரீகாரியஞ் செய்வார்களுக்கும் . . .

6. . . .பதிநெட்டு மண்டலத்து ஸ்ரீவைஷ்ணவர்கள் இரக்ஷை உ

துண்டு கல்வெட்டுகள் - குமுதம்

I

1. முகநவர் நாரண ப்ராஹ்மமாராயநெந்
2. . . .
3. . . .ழியும் சயந வேதிகைக்கு . . .
4. . . . நகல் விலைப்படி நெல் முக்கலநே . . .
5. . . .எண்பதிந் பலமும் உப்பமுது வழக்கு. . .
6. . . . நெல் பதக்கும் ஆக இவ்வகைப்படியால் வெண். . .
7. . . . றுணி ஒரு நாழியும் இலையமுது பற்று பத்து. . .
8. . . . தவேத பட்டர் நிலத்துக்கு வடக்கு நிலம் கா. . .
9. . . . நல்லாக பாட்டத்தால் பூவழி நெல் பதி. . .
10. . .க .கலநே காணி பதக்கு நீக்கி நெல் பதிநறு கல. . .

II

1. . . .வது நமக்கு நன்றுக இவூரிலே அக்கன் திருநாமத்தாலே . . .
2. . . .ளான்றுக்கு ஏழு குறுணி நானுழியாகப் பூதவானறுக . . .
3. . . .த்திறுரைகிற ப்ராஹ்மணற்கு குடுத்த வருவார்களாகவும் ப்ராஹ்மணருள் . . .
4. . . . றுக்கு அறுநாழியாக நெல் தூணிப்பதக்கும் இம்மடத்துக்குக் . . .
5. . . .மமுதா யஉஉஓரானம் பண்ணிக்குடுத்த மையில் இயஉஉஓ இவ்வூர் ஸபெ . .
6. . . . இப்படி நீக்கிக்கொண்டு இயஉஉஞ் சந்த்ராதித்த வரை செல்வதாச்செ. . .
7. . . . ள் எதிர்நாள் ஈ அயஉ இவை வாணராய தேவன் எழுத்து

III

1. உலகுடைய பி . . .
2. . . .நாழியு . . .

3. . . .ஸ்ரீ . . .

4. . . . மும் திருவீதியில் எ. . .

5. . . .திருபபாவாடை. . .

6. . . . ஆழ்வார்க்கும் திரு. . .

7. . . . கும் உயி முதல்

8. . . . குடுத்த நிலமாவது . . .

9. . . . ய முந்திரிகையும் . . .

10. . . .ப்பதக்கு இதில் . . .

6

விடேல்விடுகு எடைக்கல்

கி. ஸ்ரீதரன்
தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர் (ஓய்வு)

கல்வெட்டுகள் பல அரிய வரலாற்றுச் செய்திகளுக்கு ஆதாரமாக விளங்குகின்றன. ஒரு பொருளின் காலம், அதன் பயன்பாடு எவ்வாறு அமைந்திருந்தது என்பதை அறிவதற்கு கல்வெட்டுப் பொறிப்புகள் பெரிதும் உதவுகின்றன. இவை கோயில் சுவர்களில் மட்டுமில்லாமல் கோயில் வழிபாட்டில் இருக்கும் செப்புத்திருமேனிகள், விளக்குகள், மணிகள், பூசைப்பொருட்கள், இசைக்கருவிகள் போன்றவற்றில் காணப்படும் எழுத்துப் பொறிப்புகளும் பல வரலாற்றுச் செய்திகளை நமக்கு தருகின்றன.

தஞ்சாவூர் நீதித்துறை நடுவர் எண்: 1 நீதிமன்றத்திலிருந்து ஒரு குற்ற வழக்கில் கைப்பற்றப்பட்ட கலைப்பொருட்களை தொன்மை சிறப்பு குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்குமாறு தொல்லியல்துறை சிறப்பு ஆணையருக்கு கடிதமும், பொருட்களும் வந்தன.[1] அத்தொல்பொருட்களின் விபரம் பின்வருமாறு.

1. வட்டவடிவமான இரண்டு தங்க காசுகள்

இதன் எடை ஒவ்வொன்றும் 3600 கிராம். இதன் ஒரு பகுதியில் ஒரு சிறிய துளை உள்ளது. இவை புழக்கத்தில் இருந்த காசுகள் இல்லை. குழந்தைகளுக்கு அணிவிக்கப்பட்ட தாயத்து போல அணிகலாக இருக்கலாம். அக்காசுகளில் அரபிய எழுத்துக்கள் காணப்படுகின்றன. இதனின் காலம் சுமார் 200 ஆண்டுகள் முந்தையதாகக் கருதப்படுகிறது.

2. தங்க துண்டு

இதன் எடை 6300 கிராம் இதனின் ஒரு பக்கத்தில் சற்று தட்டையாகவும் நடுவில் சிறு பள்ளமும் உள்ளது. இது எடை நிறுக்கப் பயன்பட்டிருக்கலாம் எனக் கருதமுடிகிறது.[2]

3. செப்பு உருண்டை

இதன் எடை 215.5 கிராம். மேற்புறமும் கீழ்புறமும் இருபக்கங்களிலும் தட்டையாக உள்ளது. இதுவும் எடையாக பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

4. செப்பு உருண்டை

இதன் எடை 120 கிராம். அகலம் 3 செ.மீ மேற்புறமும் கீழ்புறமும் இருபக்கங்களிலும் பட்டையாக உள்ளது. இதில் ஒரு புறம் "ஸ்ரீவிடே[ல்]விடுகு" என்று கி.பி. 9 ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் பொறிக்கப்பட்டுள்ளது சிறப்பாகும்.

விடேல்விடுகு

'விடேல்விடுகு' என்ற சிறப்புப் பெயரை பிற்கால பல்லவ மன்னர்களும் அவர்களின் கீழ் ஆட்சி செய்த முத்தரையர்களும் கொண்டிருந்தனர். முத்தரையர்கள் பெரும்பிடுகு, மாற்பிடுகு, விடேல் விடுகு, பகாப்பிடுகு என்ற பல்லவ அரசர்களுக்குரிய பட்டங்களைப் பெற்று விளங்கினர். விடேல்விடுகு என்னும் பெயர் பல்லவ அரசர்களில் இரண்டாம் நந்திவர்மனுக்கு உண்டு.[3] பட்டத்தாள் மங்கலம் செப்பேட்டினை கச்சிப்பேட்டைச் சேர்ந்த விடேல்விடுகு பல்லவ பெருந்தச்சன் வெட்டினான் என அறிகிறோம். பாகூர் செப்பேட்டிலும் விடேல்விடுகு காடுவெட்டி தமிழ பேரரரையன் என்பவன் ஆணத்தியாக குறிக்கப்படுகின்றான். தெள்ளாறு எறிந்த நந்திவர்மனின் பட்டப் பெயர்களைக் குறிப்பிடும் பொழுது நந்திகலம்பகம் 'விடேல்விடுகு' என்ற பெயரையும் குறிப்பிடுகிறது. சில கல்வெட்டுகளில் ஊர்களின் பெயர்களும் விடேல்விடுகு என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. திருவல்லம் கல்வெட்டில் விடேல்விடுகு விக்ரமாதித்ய சதுர்வேதி மங்கலம் எனவும், காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயில் கல்வெட்டில் விடேல்விடுகு குதிரைச்சேதி என்ற ஊர்பெயரும் குறிக்கப்படுகிறது.

சிற்றரசர்களாக விளங்கிய முத்தரையர்கள் 'விடேல்விடுகு' என்ற சிறப்புப் பெயரைக் கொண்டிருந்தனர் என்பதை ஏற்கனவே பார்த்தோம். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மலையடிப்பட்டி குடைவரைக் கோயிலை விடேல்விடுகு முத்தரையன் ஆன குவாவன் சாத்தன் என்பவன் அமைத்தான் எனக் கல்வெட்டு குறிக்கிறது. இம்மாவட்டத்தில் உள்ள நார்த்தாமலை குடைவரைக் கோயில் விடேல்விடுகு முத்தரையன் மகன் சாத்தன் பழியிலி என்பவனால் குடைவிக்கப்பட்டதாகும். திருவொற்றியூர் கோயிலில் விடேல்விடுகு பல்லவரையர் என்பவர் குறிக்கப்படுகிறார். திருக்காட்டுப்பள்ளி அக்னீசுவரர் கோயில் மகாமண்டபத்து தெற்குப்பற வாயில் படிக்கட்டில் காணப்பெறும் கல்வெட்டில் நியமித்து ஆயிரத்தளி மகாதேவர்க்கு விடேல்விடுகு முத்தரையர் மகளான சாத்தங்காளி எனக் குறிக்கப்படுகிறது. இவ்விடேல்விடுகு முத்தரையனே குவாவன் சாத்தான் ஆவான். இவனே பெயராலேயே விடேல்விடுகு மங்கலம் அமைந்து இருந்ததை அறிய முடிகிறது.

பல்லவர்கால காசுகளில் விவேடல்விடுகு துளையிட்ட செம்போன் என்ற ஒருவகை காசு கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. கோயிலுக்கு நெய் அளிக்க அளக்கப்பெற்ற உழக்கு ஒன்று விடேல்விடுகு என்று பெயரிட்டு அழைக்கப்பட்டதை அபராஜிதவர்மன் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

எனவே பல்லவர்காலத்திலும், முத்தரையர் காலத்திலும் 'விடேல்விடுகு' என்ற சிறப்புப்பெயர் முக்கியத்துவம் பெற்று விளங்கியதைக் காண்கிறோம்.

தமிழகத்து கோயில்களில் அளக்கப்படும் அளவைகளுக்கு இறைவன் பெயரிட்டு அழைக்கப்பட்டதை பல கல்வெட்டுகளில் குறிப்பிடுகின்றன. மேலும் கோயிலுக்கு அளிக்கப்பட்ட பொன் போன்றவற்றை நிறுப்பதற்கு எடைக்கற்கள் பயன்பட்டன. இது நிர்ணயமான எடைக்கல் குடிஞைக்கல் (குடிநற்கல்) எனப்படுகிறது. திருச்சியை அடுத்த திருச்செந்துறை கோயிலில் பொன் நிறை எடுப்பதற்கு பயன்பட்ட கல் "விடேல்விடுகு கல்" எனப்பட்டது.[4] இதேபோன்ற பெயருடைய கல் உய்யகொண்டான் திருமலை கோயில் கல்வெட்டிலும், கடலூர் மாவட்ட கல்வெட்டிலும் (295 of 1902) என்ற எடைக்கல் குறிக்கப்படுகிறது.

தஞ்சை பெரிய கோயிலில் பொன்னால் ஆன அணிகலன்களையும், கலன்களையும் "ஆடவல்லான்" என்னும் காசுக் கல்லாலும், மணிகள் பதிக்கப்பெற்ற அணிகள் "தட்சிண மேரு விடங்கள்" என்ற குடிஞைக் கல்லாலும் நிறையிடப் பெற்றதாகக் கல்வெட்டுகள் குறிக்கின்றன.[5] எனவே இருவகை எடைக்கல் வழக்கில் இருந்திருக்கின்றன. பொன்னை நிறுப்பதற்கு பயன்பட்ட எடைக்கல் 'பாச்சில் கல்' எனக் குறிப்பிடும் செய்தி திருச்சி அருகே பாச்சில் மேற்றளி கோயிலும், திருவாசி கோயிலிலும் காணப்படுகிறது.

கும்பகோணத்தில் சோழர்கால எடைக்கல் ஒன்று கிடைத்தது. இதில் சோழர்காலத்து தமிழ் எண் ஐந்தும், அதன் பக்கத்தில் கழஞ்சு அளவைக் குறிக்க குறியீடும் காணப்படுகிறது. கழஞ்சு என்பது பொன் நிறுக்கப் பயன்பட்ட அளவையாகும். கிடைத்த எடைக்கல்லிலிருந்து ஒரு கழஞ்சு 3.8 கிராம் எடை கொண்டது எனக் கருதப்படுகிறது.[6]

தொல்லியல் துறையின் ஆய்வுக்கு வந்த எடைக்கல்லில் காணப்படும் எழுத்து பல்லவர்கால எழுத்தமைதியுடன் காணப்படுகிறது. பொன்னை நிறுப்பதற்கு பயன்பட்ட "விடேல்விடுகு" என்ற எழுத்துப் பொறிப்புடன் காணப்படும் எடைக்கல் வரலாற்றுச் சிறப்புடையது எனக் கூறலாம்.

அடிக்குறிப்புகள்

1. தஞ்சாவூர் நீதித்துறை நடுவர் எண்: 1 குற்றவியல் வழக்கு எண்: 25/2006 க.எண்: 325/ 2006 நாள்: 16.02.2006
2. இக்காசுகளைப் படித்து எழுதியவர் திருமதி. ஏ. ஜெய்புன்னிஷா, உருது பண்டிட், அரசு கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை.
3. Epigraphical and Literary reference to 'VIDEL VIDUGU' - Administration and Social life under the Pallavas by. Dr. C. Minakshi, 1977, p.374.
4. திருச்செந்துறை கற்றளிப் பெருமானடிகள் கோயில் - இரா. கஸ்தூரி. தொல்லியல் துறை வெளியீடு - 2005
5. தஞ்சை பெரியகோயில் கல்வெட்டுகள்.
6. சோழர்காலத்து எடைக்கல் - தமிழகத் தொல்லியல் சான்றுகள் - தொகுதி II –அளக்குடி ஆறுமுக சீதாராமன், 2002, பக்கம் : 15.

7.

சிவகிரிபுதூர் அத்தனூரம்மன் கோயில்

து. துளசிராமன்

அமைவு

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், படியூரிலிருந்து, ஊத்துக்குளிக்கு செல்லும் சாலையில் கணபதிபாளையம் ஊராட்சியைச் சேர்ந்த சிவகிரிபுதூர் என்னும் ஊர் உள்ளது. சிவகிரிபுதூரிலிருந்து நாச்சிபாளையம் செல்லும் சாலையில் சுமார் இரண்டு கி.மீ. தூரத்தில் சாலைக்கு அருகில் புலிக்குத்தி அம்மன் கோயில் என அழைக்கப்படும் கோயில் உள்ளது.

கோயில்

இக்கோயில் வடக்கு நோக்கியுள்ளது. கர்ப்பகிருகம் (கருவறை) சதுரவடிவில் கருங்கற்களால் கட்டப்பட்டு, அதன் மீது விமானம் செங்கல் மற்றும் சுதை கொண்டு கட்டப்பட்டுள்ளது. கருவறைக்கு முன்பு கருங்கற் தூண்கள் மற்றும் கூரை கொண்ட முன் மண்டபமும், அதற்கு முன்னால் இடைக்கட்டும், மகா மண்டபமும் கட்டப்பட்டுள்ளது. இவையும் கருங்கற் தூண்களும் கூரையும் கொண்டே விளங்குகின்றன. கருவறை சுவர்கள் மட்டும் கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. முன் மண்டப மற்றும் மகா மண்டப சுவர்கள் யாவும் பிற்காலத்தில் செங்கல் மற்றும் சுதை கொண்டே கட்டப்பட்டுள்ளன.

ஆத்தனூரம்மன்

தற்போது புலிக்குத்தி அம்மன் என அழைக்கப்படும் இறைவி விரிசடையுடன், முன்னிருகரங்களில் கபாலமும், கத்தியும் ஏந்தி எண் கரங்களுடன் காளியின் வடிவாக திகழ்கிறாள். கருவறையின் பின்புறச் சுவரில் காணப்படும் கல்வெட்டு இவ்வம்மனை "அத்தனூரம்மன்" எனக் கூறுகிறது. கொங்கு இராசிபுர நாட்டில் (சேலம் வட்டம்) மல்லூரை அடுத்துள்ளது அத்தனூர். அங்குள்ள அத்தனூரம்மன் கோயில் கொங்கு வேளாளர்களில் செம்பூத்தன்குலம், விழிய குலத்தாருக்குரிய குல தெய்வக்கோயில், கொங்கு நாட்டில் பல ஊர்களில் அத்தனூரம்மன் கோயில்கள் உள்ளன. மூலக்கோயில் அத்தனூரில் உள்ளதேயாகும். அத்தனூரிருந்து பிற ஊர்களும் குடியேறிய மக்கள் அந்தந்த ஊர்களிலேயே அத்தனூரம்மன் கோயில்களை எழுப்பி வழிபட்டனர். சித்தளந்தூர் அத்தனூரம்மன் கோயிலில் கண்ணன், சேரன் குலத்தாருக்குரிய கல்வெட்டுகள் உள்ளன.

இவை இவர்கள் இக்கோயிலில் தூண்கள் செய்து கொடுத்ததை தெரிவிக்கின்றன. (04.07.1862)[1] இக்கோயிலுக்குச் சதக இலக்கியம் உண்டு. அங்கிருந்து பிடிமண் கொண்டு வந்து கொடுமணலில் அத்தனூர் அம்மன் கோயில் கட்டியதாகக் கூறுவர்.[2]

அழகிய சிற்பங்கள்

மகா மண்டபத்தின் கூரையைத் தாங்கும் கருங்கல் தூண்களின் மேல் வைக்கப்பட்டுள்ள உத்தர கருங்கற்களில் காளி அரக்கனுடன் போர் புரியும் காட்சிகள் அழகிய சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன. காளிக்கு ஆதரவாக வீரர்களும், பூதகணங்களும் தம் கைகளில் கத்தியும், கேடயமும் ஏந்தி அன்னையின் பின்னே அணிவகுத்துச் செல்லும் காட்சிகள் தத்ரூபமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள் யாவும் கி.பி. 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாயக்கர் கலைப் பாணியைக் கொண்டுள்ளன. ஆக கி.பி. 16 ஆம் நூற்றாண்டு வாக்கில் கட்டப்பட்ட இக்கோயில் சிதலமடைந்தபடியால் மீண்டும் கி.பி. 1848 ஆம் ஆண்டில் புதுப்பித்து கட்டப்பட்டுள்ளது என்பதை இங்குள்ள கல்வெட்டு குறிப்பிடுகிறது.

பிறசிற்பங்கள்

மகாமண்டபத்தில் காளி, விநாயகர், அடியவர்கள், வீரர்கள், கிராம தெய்வங்கள் போன்ற கருங்கற் சிலைகள் உள்ளன. கோயிலுக்கு வெளியே சிமெண்டால் செய்யப்பட்ட குதிரைகளும் கிராம தெய்வங்களும் உள்ளன.

துவாரபாலகர்கள்

மகா மண்டபத்தை ஒட்டி வெளியே நுழைவாயிலின் இரு புறமும் துவார பாலகர்கள் சுதை மற்றும் செங்கல் கொண்டு பெரிய உருவங்களாக செய்யப்பட்டுள்ளன. இதில் வலபுற துவாரபாலகர் ஆண் உருவமாகவும், இடப்புற துவாரபாலகர் பெண் உருவமாகவும் வடிக்கப்பட்டள்ளது சிறப்பானதாகும்.

கல்வெட்டு

கருவறையின் பின்புற சுவரில் ஆரம்பித்து வலப்புற (கிழக்கு) சுவரில் முடியும் 17 வரிகளில் ஒரு கல்வெட்டு உள்ளது. இது கலியுக ஆண்டு 4949 இல் (கி.பி. 1848) குரோதி வருடம் பங்குனி மாதம் 15 ஆம் தேதி வெள்ளிக்கிழமையில் பொறிக்கப்பட்டது. நாச்சிபாளையம் ஆதிக்கத்திற்குட்பட்ட வேழறாசி காட்டுபாளையம் என்னும் ஊரைச் சேர்ந்த ஆயிப்புலவன் மகன் பழனிப்புலவன் என்பவரால் இக்கோயிலின் கருவறை மண்டபம் புதுப்பித்து கட்டப்பட்டது என்பதைக் இக்கல்வெட்டு குறிக்கிறது.

கல்வெட்டு

1. கலியுக சகார்த்தம் ௪௲௯௱௪௰௯ குரோ
2. தி௵ பங்குனி மீ ௰௫ தேதி வெள்ளி
3. கிளமை உத்திர நட்செத்திரம் ஆதிகெண்ட

4. னாம யொகம் பஞ்சமியும் கூடின
5. சுப தினத்தில்
6. னாச்சி பாழயம் ஆதிகத்து
7. க்குச் சித்து வற்க்க னைக்குள்ள
8. வெழறாசி காட்டுப்பாளையதி
9. லிருக்கும் ஆயிப் புலவன் மக
10. ன் பளனிப் புலவன் அத்தனூரம்மன்
11. கெற்ப கிர மண்பஞ் சிரண உத்தி
12. ர மாக ஷ யூர் முத்து வெலப்ப கவுண்டர்
13. பெரியண கவுண்டர் கனக்குச் சின்ன
14. யப் புள்ளை இவர்க
15. ள் னாளில் நடப்பி
16. ச்ச அத்தனூரம்ம
17. ன் உபையம்

அடிக்குறிப்புகள்

1. சேலம் நாமக்கல் மாவட்டக் கல்வெட்டுகள் – ஆ. கிருட்டிணன், பக்:126
2. கொங்கு களஞ்சியம், தொகுதி -I, பக்கம் - 43.

8

மேலைக்கிடாரம் – திருவனந்தீசுவரர் திருக்கோயில் ஒரு வரலாற்றுப்பார்வை

சொ. சந்திரவாணன்

ஊர் அமைவிடம்

இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி வட்டத்தில் அமைந்துள்ளது மேல் கடாரம் எனும் சிற்றூர் இவ்வூர், இராமநாதபுரத்திலிருந்து சாயல்குடி திருச்செந்தூர் செல்லும் சாலையில் கீழ்ச் செல்வனூரிலிருந்து தென்கிழக்கில் சுமார் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

ஊர்ப்பெயர்

'கடாரம்' 'மேல்க்கிடாம்' 'மேல்க்கடாரம்' என்று அழைக்கப் படுகின்ற இவ்வூர் கல்வெட்டுகளில் 'கிடாரம்', 'கடாரம்' *என்றும்,* 'கடாரம் கொண்ட புரம்' என்றும் அழைக்கப்படுகின்றன. மக்களின் பேச்சு வழக்கில் 'மேலைக்கிடாரம்' என்று அழைக்கப்படுகின்றது.

ஊரின்பழமை

இவ்வூரின் பழமையைப் பறைசாற்றும் வகையில் இவ்வூரின் நத்தப்பகுதியில் கிடைக்கின்ற கருப்பு சிவப்பு வண்ணப் பானை ஓட்டுச் சில்லுகள் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முந்தையது இவ்வூர் என்பதை உணர்த்துகின்றன. மேலும் கல்வெட்டுகளைக் கொண்டு விளங்கும் சிவன்கோயில் ஒன்றும் அம்மன் கோயில் ஒன்றும் இவ்வூரின் வரலாற்றைக் கி.பி. 13 ஆம் நூற்றாண்டுக்கு முந்தையது எனக் காட்டுகின்றன.

இறைப்பெயர்

சிவன்கோயில் இறைவன் மக்களின் பேச்சுவழக்கில் 'திருநாகேஸ்வரர்' என்று அழைக்கப்படுகின்றார். ஆனால் இங்குள்ள கல்வெட்டுகளில் 'திருவனந்தீஸ்வரர்' என்று இறைவன் குறிப்பிடப்படுகின்றார்.

பிறகோயில்கள்

இவ்விரு பெருங்கோயில்களைத் தவிர சில சிறுதெய்வக் கோயில்களும் இவ்வூரில் உள்ளன. இத்துடன் ஊர்ப்பகுதியினை ஒட்டி வடக்குத்திசை பார்த்த நிலையில் ஒரு சமண

தீர்த்தங்கரர் சிலை ஒன்று காணப்படுகிறது. இதன் மூலம் இவ்வூரில் சமணம் சிறந்து விளங்கிற்று எனத் தெரிகின்றது. 'மகாவீரர்' எனும் இத்தீர்த்தங்ரர் சிலையைத் தற்போது வைணவ சமயத்தவர் நம்மாழ்வார் என வழிபட்டு வருகின்றனர்.

கோயில் அமைவிடம்

இவ்வூரின் வடமேற்கில் 2 கி.மீ. தூரத்தில் கிழக்குப் பார்த்த சிவன்கோயில் ஒன்றுள்ளது. இது மக்கள் பேச்சு வழக்கில் 'நாகேஸ்வரர் கோயில்' என்று அழைத்து வருகின்றனர். இங்கு கோயில் கொண்டுள்ள இம்மூர்த்தி லிங்கத் திருமேனியாகக் காட்சி தருகின்றார். இவ்லிங்கத் திருமேனியினை ஒரு நாகம் ஒன்று காத்துவந்ததனால் திருநாகேஸ்வர சுவாமி என அழைக்கப்பட்டதாகக் கூறுகின்றனர்.

கோயில் அமைப்பு

ஊரின் வடக்கில் அமைந்துள்ள ஊருணிக்குளக்கரையின் தென்கரையில் இச்சிவன்கோயில் அமைந்துள்ளது. கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், முன்மண்டபம் என்ற முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

கருவறை அதிட்டானப்பகுதியில் ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், போதிகை, பட்டி போன்ற கட்டடக் கூறுகளுடன் காணப்படுகின்றன. சுவர்ப்பகுதியினை அரைத்தூண்கள் அழகு செய்கின்றன. கோட்டங்களில் இறைஉருவங்கள் இல்லாது பொய்க்கோட்டமாகக் காட்டப்பட்டுள்ளன. கோட்டத்தின் மீது மகரதோரணங்கள் அழகுற வடிக்கப்பட்டுள்ளன. கொடுங்கைப் பகுதிவரை கருங்கற்களால் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு சில இடங்களில் மணற்கற்கள் இடம் பெற்றுள்ளன.

அதிட்டானப்பகுதி தெற்கிலும் மேற்கிலும் மண்மூடிக் கிடக்கின்றன. வடபகுதியில் (குளக்கரைப் பகுதியில்) அதிட்டானப்பகுதி வெளியே தெரிகின்றது.

கருவறையில்

சதுரமான கருவறையில் இறைவன் லிங்கவடிவில் காட்சிதருகின்றார். அருவுருவ வடிவில் உள்ள இச்சிவலிங்கம் சதுரமான ஆவுடையார் மீது காட்டப்பட்டுள்ளது. மூலவர் திருநாகேஸ்வர சுவாமி என அழைக்கப்பட்டு வருகிறார்.

கல்வெட்டுச் செய்திகள்

இக்கோயிலின் கருவறை, மண்டபச் சுவர் ஜகதிப்படைகளில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் சிதைந்த நிலையில் காணப்படுகின்றது. ஒரு சில தொடக்கமும் முடிவும் இல்லாத துண்டுக் கல்வெட்டுகளாகக் கிடைக்கின்றன. அவ்வகையில் இங்கு சுமார் 8 கல்வெட்டுகள் உள்ளன. அவற்றிலிருந்து இவ்வூரின் பெயர், இறைவன் பெயர், தானத்தின் தன்மை, தானப் பொருள், நாட்டுப்பிரிவு, பிற ஊர்ப்பெயர்கள் போன்றவை தெரியவருகின்றன.

கல்வெட்டில் மன்னன் பெயர்

இங்குள்ள கல்வெட்டுகளின் படி இக்கோயிலுக்கு தானம் வழங்கிய மன்னர் பெயர் 'சுந்தரபாண்டியன்' (கி.பி. 1236) எனும் பாண்டிய மன்னன் ஆவான். இம்மன்னன் காலத்திலோ அன்றி அவருக்கு முன்போ இக்கோயில் கட்டப்பட்டிருக்கலாம் எனத் தெரிகின்றது. இது கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் அதாவது இன்றைக்குச் சுமார் 800 ஆண்டுகளுக்கு முந்தியதாகக் கருதப்படுகின்றது. மன்னர் பெயரன்றித் துண்டுக் கல்வெட்டுகளாகக் காணப்படுகின்ற கல்வெட்டுகளின் எழுத்தமைதி கொண்டு பார்த்தால், கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகவே கருதப்படுகின்றது.

ஊர்ப்பெயர், இறைப்பெயர்

கல்வெட்டுகளில் இவ்வூரின் பெயர் 'கடாரம்', 'கிடாரம்' 'கிடாரங்கொண்டபுரம்' எனக் குறிபபிடப்படுகின்றது. இறைப்பெயர் 'திருவனந்தீசுவரமுடைய நாயனார்' எனக் காணப்படுகின்றது. மேலும், இக்கோயிலில் இருந்த சண்டிகேசுவரர் பெயரும் குறிப்பிடப்படக் காணலாம்.

பிறநாடும் ஊர்ப்பெயரும்

இக்கல்வெட்டுகளில் காணப்படுகின்ற பிறநாட்டுப் பிரிவுகளும் ஊர்ப்பெயர்களும் வருமாறு:

'இடைக்குளநாட்டுச் செழுவனூரான சத்துருப்பமங்கலம்', 'இடைக்குடி நாட்டு ஆப்பனூர்' என வரக் காணலாம். இவை தவிர சில ஊர்ப்பெயர்களாவன: பரித்திக்குடி, இடையக்குளம், திருவாப்பனூர், அரும்பேரூர், அரும்பூர், குலைசேகரச் செக்குடி போன்ற ஊர்ப் பெயர்கள் காணப்படுகின்றன.

ஆள்ப்பெயர்கள்

இக்கல்வெட்டுகளில் ஒரு சில அதிகாரிகளின் பெயர்கள், சாட்சி கையோப்பமிட்டவர்கள் பெயர்கள், தங்கள் ஊர்ப்பெயர்களுடன் குறிப்பிடக் காணலாம். மேலும், கோயில் சிவப்பிராமணர்கள், தேவகன்மிகள் எனக் குழுப் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. சான்றாக 'செழுவனூர் நாடலீசுவரர் கோயில் சிவப்பிராமணர்கள்', 'பருத்திக்குடி ராயன்', 'தேவன் சோழன்', 'நாராயணன்', 'முத்தான கொன்றைய ராயன்', 'கூத்தன் உய்யவந்தான்', 'மாதவனான வீரபாண்டிய முத்தரையன்', 'பூவனான தென்னவன்', 'அரும்பேர் நாடாழ்வான்', 'வல்லவன் தேவனான தென்னவன்', முத்தனான தோன்றிய ராயன் என்ற பெயர்கள் காணப்படுகின்றன.

மேலும், சிலர் தற்குறியாக (எழுதப்படிக்கத் தெரியாதவர்கள்) இருந்தனர் என்றும், அவர்களுக்காகப் பிறர் கையோப்பமிட்ட செய்தியும் தெரிகின்றது. இக்கோயிலுக்காகக் கொடுக்கப்பட்ட நிலத்தானங்கள் பற்றிய முழுமையாகத் தெரிந்து கொள்ள இயலவில்லை. காரணம் கல்வெட்டுகள் சிதைந்தும் எழுத்துக்கள் பொறிந்தும் காணப்படுவதால் முழுச்செய்திகள் அறிந்து கொள்ள முடியவில்லை.

9

பண்டைய தென்னிந்திய நூலகங்கள்

சு. செல்வகுமரன்
நூலகர்

பண்டைய நூலகங்களை சான்றோர்கள் சரசுவதி பண்டாரம் அல்லது புஷ்தகபண்டாரம் என்று அழைத்தனர்.[1] பண்டைய காலத்தில் ஓலைச்சுவடிகளில் எழுதி அதனை மடத்திலும் மாணவர்கள் குருக்கள் வாழும் இடத்திலும் வைத்திருந்தனர் என்ற செய்தி நூலகம் தென்இந்தியாவில் வேர் ஊன்றியதற்கான குறிப்பாக உள்ளது. முந்தைய காலத்தில் பண்டாரம் என்பதற்கு கருவூலம் என்று பொருள். ஸ்ரீ என்றால் சொத்து என்றும் பண்டார என்றால் இடம் என்று பொருளாகும். அது போன்றே சரசுவதி பண்டாரம் என்பது படிப்பின் சக்தியாக விளங்கும் சரசுவதி குடியிருக்கும் இடமாக இருந்ததாலே அவ்வாறாக அழைக்கப்பட்டது. நவீன யுகத்திலும் புத்தகங்களை பாதுகாத்து படிக்கும் இடமாக இருப்பதாலே புஸ்தக பண்டாரம் என அழைக்கப்பட்டு, பின்னர் நூலகம் என்றாகியது.

பண்டைய நூலகங்கள் இந்தியாவில் தக்ஷீலா, நாளந்தா, காசி, கௌத்தி போன்ற இடங்களில் இருந்த பல்கலைகழகங்களிலும் மன்னர்களின் அரண்மனைகளிலும் மேலும் கோயில்களிலும் இருந்தன.

ஸ்ரீரங்கம் கோயில் வளாகத்தில் நூலகம் இருந்ததிற்கான சான்று கிடைத்துள்ளது. நூலகத்தின் அருகே மூன்று தெய்வங்களை பாலபள்ளி நீலகண்ட நாயக்கர் நிறுவினார் என்பது தெரிய வருகிறது. இதுவே கோயிலில் நூலகம் இருந்ததற்கான முதல் சான்று எனலாம். 13-ஆம் நூற்றாண்டின் மத்தியிலோ அல்லது அதற்கு முன்பாக நூலகம் அமைக்கப்பட்டிருக்கலாம். மேலும் சேரமாதேவி துவாரபதி அப்பன் கோவிலில் உள்ள 13-ஆம் நூற்றாண்டு பாண்டியர் கால கல்வெட்டு, நூலகம் இருந்ததற்கான சான்றைத் தருகிறது. நூலகத்திற்கு இரண்டு மா நிலம் (வரியில்லாமல்) தானமாக கொடுத்தமைக்கான குறிப்பு உள்ளது. அதில் தங்களூர் துவாரபதி அப்பர்க் கோயிலில் கைச்சிக்கு வச்ச படியே பிரமாதரையர் தன்மான ஸரஸ்வதி பண்டாரத்துக்கு . . . .என்று உள்ளது.

சிதம்பரம் நடராஜர் கோயிலில் உள்ள வளாகத்தில், சுப்ரமணியர் ஆலயத்தின் வடபுறத்தில் நூலகம் இருந்ததற்கான சான்று உள்ளது. இரண்டு பாண்டியர் கல்வெட்டுகள் கோயிலில் உள்ளன. இந்த கல்வெட்டுகள் புத்தக இருப்பிடத்தை எப்படி மேம்படுத்துவது, பராமரிப்பது என்று விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது.[2] ஆனால் தற்போது

பெரும்பான்மையான குறிப்புகள் மறைந்தும் அழிந்த நிலையில் உள்ளதால் முழுமையாக படிக்க இயலாத நிலை உள்ளது. நூலகத்தில் உள்ள சுவடிகள் படித்து தரப்பட்டால் அவர்களுக்கு அரிசி அல்லது கூலி தரப்படும். இது ஜடாவர்மன் சுந்தர பாண்டியர் 1 (1251-70 CE) - [3] கால கட்டத்தில் நடைபெற்றதாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. பண்டிதர்கள் நூலகத்தில் உள்ள ஆவணங்களை முறையாக படித்து அதனை நகல் எடுக்கும் பணியும் செய்தனர் என அறியப்படுகிறது. அது "முற்பட்ட ஸரஸ்வதி பண்டாரத்தில் எழுதி கிடைக்கிற கிரதங்கள் . . ." என்று உள்ளது. இங்கு 20க்கும் மேற்பட்டச் சான்றோர்கள் நூலகத்தில் சுவடிகளை எழுதுவதற்கும், படிப்பதற்கும் அதனை பாதுகாப்பதற்குமான பணி செய்தனர். அப்பணியில் காஞ்சி நிருத்யராய ஆழ்வார் என்பவர் கிரந்தத்தில் எழுதப்பட்ட சுவடிகளின் மூலம் கற்பிக்கும் பணிசெய்தார்.

சேக்கிழார் தமது படைப்புகளுக்கு சிதம்பரத்தில் இருந்த நூலகத்தை பெரிதும் பயன்படுத்தினார் என்பது தெரிய வருகிறது. சைவ நாயன்மார்களைப் பற்றி சிதம்பரத்தில் இருந்த போது குறிப்பிட்டு எழுதியுள்ளார். சேக்கிழார், குலோத்துங்க சோழன் II (1133 லிருந்து 1150 வரை) மன்னரின் அவைப்புலவராக இருந்துள்ளார். எனவே 12-ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் நூலகம் ஏற்படுத்தப்பட்டு இருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.[4]

காஞ்சிபுரம் மடங்களிலும் நூலகம் இருந்துள்ளது என்பது 1359 CE) -[5] குறிப்புகளில் இருந்து அறியலாம். இதில் உள்ள குறிப்புகளில் ஸ்ரீங்கேரியில் உள்ள சங்கர மடத்திலும் நூலகம் இருந்ததற்கான குறிப்பு காணப்படுகிறது. நூலகத்தை புதுப்பித்து நிர்மாணம் செய்ய தேவையான இடம் தானமாக கவி கிருஷ்ணதேவராயர் II மன்னர் குறிப்பின் மூலம் அறியலாம்.[6]

பனை ஓலையில் எழுத படிக்கும் பழக்கத்தை நீதிநூல்களான நாலடியார் மற்றும் ஏலாதியின் மூலம் அறிய முடிகிறது.[7]

விக்கிரமசீலா. வாலாபி மற்றும் காஞ்சி பல்கலையின் நூலகங்கள் மிகப் பழமையான நூலகங்கள் ஆகும். இதன் காலம் 5-ஆம் நூற்றாண்டு முதல் 8-ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்டதாகும். தென் இந்தியாவில் கிருஷ்ணா நதி கரையோரம் அமைந்த அமராவதியில், நாகார்ஜுனா வித்யா பீடம் 7-ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது. ஐந்து அடுக்குகளை கொண்டு அமைக்கப்பட்ட பல்கலையின் மேல் தளத்தில் அரிய பல நூல்களை தன்னகத்தே கொண்டிருந்தது. புத்த மத தத்துவ நூல்கள் அதிகம் இருந்தன. அவற்றில் முக்கியமாக நாகார்ஜுனராவால் துவங்கப்பட்ட மஹாயானா பற்றிய குறிப்புகள் இருந்தன. இந்த பல்கலை மற்றும் நூலகம் 7-ஆம் நூற்றாண்டில் இருந்ததிற்கு போதுமான தொல்லியல் சான்றுகள் உள்ளன. இந்த நூலகத்தில் தாவரம், மருத்துவம், புவியியல், தாதுவியல் மேலும் புத்த மத நூல்கள் பல இருந்துள்ளன. இவற்றைப் பற்றி அறிய இந்தியாவின் பல பகுதியிலிருந்தும் பர்மா, இலங்கை மற்றும் சீனாவில் இருந்தும் அறிஞர்கள் வருகை புரிந்துள்ளனர்.[8]

ஹைறதர் அலியின் மகன் திப்பு சுல்தான் மைசூர் மன்னராக இருந்த காலத்தில் பல நூலகங்களை நிறுவினார். அவர் ஆட்சியில், ஸ்ரீரங்கபட்டினத்தில் அமைக்கப்பட்ட ஜெய்முல் உமர் பல்கலை பிரசித்தி பெற்றது. ஐரோப்பா தேசம் உட்பட பல நாடுகளில் இருந்தும் புத்தகங்களைச் சேகரித்தார். இந்த நூலகத்தில் அவுரங்கசீப் அலாம்ஹிரால் தன் கைப்பட எழுதிய புனித குரான் இருந்தது. இங்கு 2000த்திற்கும் அதிகமான பெர்சியன் அரபி, இந்தி மொழிகளால் எழுதப்பட்ட ஓலைச்சுவடிகள் இருந்தன. மேலும் திப்புசுல்தான் அமைத்த நூலகத்திலிருந்து பெறப்பட்ட ஓலைச்சுவடிகள் லண்டனில் உள்ள இந்தியா அலுவல் நூலகத்திலும் (India Office Library) பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பது சிறப்பு அம்சமாகும்.

முதல் இந்திய சுதந்திரப் போருக்கு பின் ஆயிரக்கணக்கான அரிய நூல்கள் பல இங்கிலாந்திற்கு கொண்டு செல்லப்பட்டன.[9] தென்இந்தியாவின் மூன்றாவது பழமையான ஒஸ்மேனியா பல்கலைகழக நூலகத்தில் பல அரிய நூல்கள் மற்றும் ஓலைச்சுவடிகள் உள்ளன. 1869-ஆம் ஆண்டு கோலொனல் மெக்கன்ஸி என்ற ஆங்கில பொறியாளரின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட அரசினர் கீழ்த்திசைச்சுவடிகள் நூலகம் (தமிழ்நாடு தொல்லியல் துறை) சென்னை பல்கலைகழக வளாகத்தில் சிறப்புடன் தன் பணியினை தொடர்ந்து வருகிறது.

தஞ்சாவூரில் உள்ள மன்னர் சரபோஜி சரஸ்வதி மஹால் நூலகம் நாயக்க மற்றும் மராத்திய மன்னர்களின் முயற்சியால் நிறுவப்பட்டது. இங்கு உள்ள நூல்கள், ஓலைச்சுவடிகள், வரைபடங்கள் மற்றும் ஓவியங்கள் உலக மக்களின் கவனத்தை தன் பக்கம் கவரும் வகையில் அமைந்துள்ளது. நாயக்க மன்னர்களின் காலத்தில் (1535-1675 A.D.) இந்நூலகம் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் மராத்திய ஆட்சியர் தஞ்சாவூரினை கைப்பற்றினர். 1675 A.D. விருந்து 1855 A.D. வரை இந்த அரிய நூலகத்தை பாதுகாத்து வளர்த்தனர்.

பண்டைய நூலகத்தை பற்றி அறிய முற்படும் போது வட இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட பல்கலையில் உள்ள நூலகங்களை பற்றி குறிப்பு இடம் பெற்றாலும், தென் இந்தியாவில் இடம் பெற்ற நூலகத்தை பற்றிய குறிப்புகள் குறைவாகவே உள்ளன. சீன பயணி யுவாங் சுவாங்கின் குறிப்பில் மட்டும் காஞ்சி பல்கலையில் இருந்த நூலகத்தை பற்றி அரிய ஓலை சுவடிகள் பல அவர்கள் காலத்தோடு அழிந்தது எனலாம். அதனால் தலைமுறையினருக்குச் சேர வேண்டிய செய்திகள் கிடைக்காமல் போனது. 11-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நூலக குறிப்புகள் கிடைப்பது என்பது அரியதாயிற்று. இருப்பினும் தென்இந்தியாவில் பண்டைய நூலகங்கள் இந்திய தேசத்திற்கு அளவில்லா பாரம்பரிய சொத்தினை அளித்துள்ளது எனலாம்.

பார்வை நூல்கள்

1. ARE 283 & 284 of 1936-37
2. ARE 168 & 169 of 1961-62
3. ARE for 1961-62 p.6
4. A Medieval manuscript library at Chidambaram by Dr. A. Padmavathy
5. Conjeevaram inscription of Brahma-tantra-svatantra Jiyar, EI, XXV, No.34
6. Education in South India (Ancient and Medieval Period) by S. Gurumurthy
7. நாலடியார் மற்றும் 253: ஏலாதி 63:1
8. Academic Libraries in India: A Historical Study
9. Growth and Development of Oriental Libraries in India Library Philosophy and practice 2008



உடைந்த ஆம்போரா ஜாடிகளின் துண்டுப்பகுதிகள்



ஆம்போராவின் வடிவம்

தமிழகத்தில் கிடைத்த ரோமானியக்காசுகள்

தரங்கம்பாடி புராதன கலைவிழா

நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடியில் புராதன கலைவிழா 16.02.2012 மற்றும் 17.02.2012 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திருமதி. எஸ். கோகுல இந்திரா அவர்கள் மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. ஜெயபால் அவர்கள் தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை முதன்மைச் செயலர் திரு. வி.கு. ஜெயக்கொடி இஆப. அவர்கள் மற்றும் சுற்றுலாத் துறை ஆணையர் (ம) நிர்வாக இயக்குனர் திரு. இராஜேஷ்லகானி இஆப. ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்





தரங்கம்பாடி கோட்டை மற்றும் அகழ்வைப்பகத்தினை
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை
முதன்மைச் செயலர் திரு. வி.கு. ஜெயக்கொடி இஆப,
அவர்களால் 17.02.2012 அன்று ஆய்வுசெய்யப்பட்டது.